விலை: 20/=

நமது

செய்வதை துணிந்து செய் சொல்வதைத் தெளிந்து சொல்

# முரசொலி

මුරසොලි Murasoly

வார இதழ்

முரசு - 01 (23.08.2013 - 30.08.2013) திருவள்ளுவர் ஆண்டு : 2044 முழக்கம் - 01



தமிழ் வாக்களிப்பு பாரம்பரியம்

- நிலாந்தன்



நாட்டார் பாடல்களும் பெண்களும்

- கீதாகணேஷ்



காலக் கனதியை புரிந்து கொள்ளவேண்டும்

- பல்லவன்



# வடமாகாண சபைத் தேர்தல் மக்களுக்கு விடிவு தருமா?



போர் விதைத்துவிட்ட

## பண்பாட்டுச் சவால்கள்

- அ. அஜந்தன்



## தாய்நிலம்

யூலைக் கலவரத்தின் மறுபக்கச் சான்று

- வளர்மதி



சுவாமி

வம்பானந்தா

நல்லவை நாளும் விளைய உண்மையை நேர்மையாய் ஒலிக்கும் எமது முரசொலி



# தமிழ் வாக்களிப்பு பாரம்பரியம்


- நிலாந்தன்

ஈழப்போருக்கு முற்பட்ட காலத்தில் நடந்த ஒரு சம்பவம் இது. அது ஒரு தேர்தல் காலம். பீற்றர் கெனமன் வடமராட்சியில் ஒரு தேர்தல் பிரசார மேடையில் உரையாற்றினார். மைதானம் முழுவதும் சனங்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். விசிலடியும், கைதட்டும் பிரமாதமாக இருந்தது. கூட்டம் முடிந்ததும் கெனமன் தனக்கு நெருக்கமானவர்களிடம் சொன்னார் ''இம்முறை எமக்கு வடமராட்சியில் ஒரு சீற்றாவது கிடைக்கும்' என்று. ஆனால், தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருந்தன. பீற்றர் கெனமனுடைய வேட்பாளர் தோல்வியடைந்துவிட்டார். இச்சம்பவத்தின் பின் கெனமன் பின்வரும் தொனிப்படக் கருத்துத் தெரிவித்திருந்தார்.... ''தமிழர்கள் எம்மை நன்கு உபசரித்து விருந்தோம்புவார்கள். தேர்தல் கூட்டங்களில் பெருங்கெடுப்பில் கலந்து கொண்டு நாம் சொல்வதை ஆர்வத்துடன் கேட்பார்கள். விசிலடித்து, கைதட்டி உற்சாகமூட்டுவார்கள். ஆனால், வாக்களிப்பு என்று வரும்போது பெடரல் பார்ட்டிக்குத்தான் வாக்குப்போடுவார்கள்' என்று.

கெனமன் காலத்திலிருந்து இன்று வரையிலும் தமிழ் வாக்களிப்புப் பாரம்பரியத்தின் பெரும்போக்கெனப்படுவது இதுதான். அதாவது தமிழர் கள் சாதி பார்ப்பார்கள். சமயம் பார்ப்பார்கள். பிரதேச வாதமும் கதைப்பார்கள். ஆனால், வாக்களிக்க வேண்டிவரும்போது பெரும் பாலானவர்கள் எப்பொழுதும் ஒரு பொது நிலைப்பாட்டிற்கே வாக்களிக்கிறார்கள். இங்கு பெரும்போக்கு என்ற வார்த்தைக்கு அதிக அழுத்தம் உண்டு. ஏனெனில், அதல்லாத வேறு உபபோக்குகளும் உண்டு.

தவிர ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வாக்களிப்பது என்பது ஒரு பொதுவான பெரும்போக்கு என்பதற்காக தமிழ் வாக்காளர்கள் சாதி, சமயம், பிரதேசம், இனசனம் மற்றும் பின்பற்றப்பட்ட பிரதியுபகாரம் போன்றவற்றை முற்றாகக் கவனத்திலெடுப்பதில்லை என்று பொருள் கொள்ளத் தேவையில்லை. சாதி, மதம், ஊர், இனசனம் போன்றவை இரண்டாம் பட்சத் தெரிவுகளாக அமைய முடியும் அல்லது தாம் தெரிந்தெடுக்கும் பொது நிலைப்பாடு அல்லது ஓர் இலட்சியம் அல்லது கோட்பாட்டின் பிரதிநிதியாக வரும் ''தங்களுடைய ஆளை' அவர்கள் தெரிவு செய்வதுண்டு என்றும் இதற்கு விளக்கமளிக்கலாம்.

ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் இதுதான் நிலை. ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரும் இதுதான் நிலைமை. இதில் காலத்துக்குக் காலம் பெரும்போக்கான வாக்களிப்பின் விகிதம் ஏறவோ, இறங்கவோ கூடும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உரு வாகிய பின், சிவராம் வீரகேசரி வாரப் பத்திரிகை யில் எழுதிய ஓர் கட்டுரையில், தமிழ் மக்கள் கட்சிகளுக்கும், ஆட்களுக்கும் வாக்களிப்பதற்குப் பதிலாக கொள்கைகளிற்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். ஆனால், சிவராம் அப்படி ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுவதற்கு முன்னரே



தமிழ் வாக்களிப்பு பாரம்பரியம் எனப்படுவது அப்படித்தானிருந்து வந்துள்ளது. கடந்த சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலான தமிழ் வாக்களிப்புப் பாரம்பரியத்தின் பெரும் போக்கெனப்படுவது அதுதான். அதாவது ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வாக்களிப்பது. இப்பொழுது நிலைப்பாடானது காலத்துக்குக் காலம் வெவ்வேறு வார்த்தைகளில் வெவ்வேறு சின்னங்களிற்கூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ''தமிழரசு' என்றும், ''வட்டுக்கோட்டைத் தீரமானம்' என்றும் ''தமிழர் விடுதலை' என்றும், ''தமிழ்த் தேசியம்' என்றும் அது வெவ்வேறு சொற் தொகுதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

வேறுவேறு கால கட்டங்களில் வேறுவேறு சின்னங்கள் மேற்படி பொது நிலைப்பாட்டின் குறியீடுகளாகக் காட்சியளித்திருக்கின்றன. உதயசூரியன், வெளிச்சவீடு, வீடு... போன்ற சின்னங்கள் யாவும் மேற்படி பொது நிலைப்பாட்டின் குறியீடுகள்தான் - அதிலும் குறிப்பாக, ஐ.பி.கே.எவ். காலத்தில் ஈரோஸ் இயக்கமானது வெளிச்சவீடு சின்னத்தின் கீழ் சுயேட்சையாகப் போட்டியிட்டு வென்றதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு சுயேட்சைக் குழு அத்தகைய வெற்றியைப் பெற்றது என்பதை இங்கு கவனிக்க வேண்டும். ஐ.பி.கே.எவ். காலத்துத் தமிழ் மனோ நிலையை அந்த வெற்றி பெருமளவுக்குப் பிரதிபலித்தது எனலாம். மேற்படி தமிழ் மனோநிலை எனப்படுவது அதற்கு முன்பிருந்து வந்ததும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து வருவதுமாகிய ஒரு பொதுத் தமிழ் நிலைப்பாட்டின் பாற்பட்டதுதான்.

சரி, அந்தப் பொதுத் தமிழ் நிலைப்பாடு எனப்படுவது எது? திட்டவட்டமாக அது ஒரு இன அடையாள அரசியல் தான். தமிழர்கள் இனம், மொழி என்பன தொடர்பில் தமது கூட்டு அடையாளங்களை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய ஒரு பொது நிலைப்பாட்டை ஆதரித்து வந்துள்ளார்கள். இன வன்முறைகள் தொடர்பாக எழுதிய ஜி.எச். பார்மர், தார்சி விற்றாச்சி போன்றோர் சுட்டிக்காட்டிய ஓர் உளவியல் யதார்த்தம் அது. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் அது இருந்தது. ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் அது இருக்கிறது. அதாவது, பார்மர் கூறியது போல நாடு உளவியல் ரீதியாக ஏற்கனவே, பிரிந்துதான் காணப்படுகிறது.

இக்கூட்டுத்தமிழ் உளவியலுக்குத் தலைமை தாங்க முற்படும் கட்சிக்கே தமிழர்கள் பெரும்போக்காக வாக்களித்து வந்துள் ளார்கள். இக் கூட்டுத் தமிழ் உளவி யலைக் குறிக்கும் ஆகப் பிந்திய சொற்பிரயோகமே தமிழ்த் தேசியம் என்பதாகும். தமிழ்த் தேசியத் தின் ஜனநாயக உள்ளடக்கப்போதாமை காரண மாக மேற்படி பொதுத் தமிழ் நிலைப்பாட்டிற்கு வெளியிலிருக்கக் கூடிய நுண் அடுக்களான சாதி, சமயம், பிரதேசம் பால் அசமத்துவம் போன்றவற்றை இக்கட்டுரை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. மேலும் குறிப்பாக, தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக உள்ளடக்கப் போதாமைகளின் விளைவாகத் தோன்றியதே முஸ்லிம் உபதேசியம் என்பதையும் இக்கட்டுரை ஏற்றுக் கொள் கிறது. எனினும், எல்லாவித விமர் சனங்களிற்கும் அப்பால், கூட் டுத்தமிழ் உளவி யலின் பாற்பட்ட ஒரு வாக்களிப்பு பாரம்பரியம் எனப்படுவது ஒப்பீட்டளவில் பெரும்போக்காக நிலவி வருகிறது என்பதன் அடிப்படையில் அப்பெரும் போக்கின்

> **சரி, அந்தப் பொதுத் தமிழ் நிலைப்பாடு எனப்படுவது எது? திட்டவட்டமாக அது ஒரு இன அடையாள அரசியல் தான். தமிழர்கள் இனம், மொழி என்பன தொடர்பில் தமது கூட்டு அடையாளங்களை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய ஒரு பொது நிலைப்பாட்டை ஆதரித்து வந்துள்ளார்கள்.**

மீதான கவனக் குவிப்பே இன்று இக்கட்டுரை யாகும்.

இத்தகைய ஒரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியதிலிருந்து அதற்குக் கிடைத்துவரும் தேர்தல் வெற்றிகள் யாவும் மேற்படி கூட்டுத் தமிழ் உளவியலின் பாற்பட்டவைதான். அதாவது இன அடையாள வாக்குகள் அல்லது அரசுக்கு எதிரான வாக்குகள்தான். இந்த அடிப்படையில் வரப்போகும் மாகாண சபைத் தேர்தலின்போதும் மேற்படி கூட்டுத் தமிழ் உளவியலே கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்புக்களிற்கு அடிப்படையாக அமையும். இக்கட்டுரையானது மாகாண சபையை ஒரு தீர்வற்ற தீர்வாகவே பார்க்கிறது. எனினும் மேற்ப டி கூட்டுத் தமிழ் உளவியலின் பிரதிபலிப்பே தமிழ்த் தேசியம் என்பதின் அடிப்படையில், வரப்போகும் தேர்தலில் இக்கூட்டுத் தமிழ் உளவியல் வெளிப்பாட்டுக்கான வாய்ப்புகளைக் குறித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. கூட்டமைப்பின் வாக்கு வங்கியை மூன்று மூலக் கூறுகள் தீர்மானிக்கின்றன. முதலாவது மேற் சொன்ன கூட்டுத் தமிழ் உளவியல். இரண்டாவது, தற்காப்பு உணர்வுமிக்க தமிழ் நடுத்தர வர்க்கத்தின் ஆதரவு அதாவது பங்களிக்கத் தயாரற்ற தமிழ்த் தேசிய வாதிகளின் ஆதரவு. மூன்றாவது, தனித்தனிக் கட்சிகள், நபர்களுக்குரிய வாக்குகள். இது ஒப்பீட்டளவில் குறைவு.

இம்மூன்று மூலக் கூறுகளிற்குள்ளும் பின் சொன்ன இரண்டு வகைகளைச் சேர்ந்தவர்கள் அநேகமாக எப்பொழுதும் வாக்களிப்பில் கலந்து கொள்வார்கள். ஆனால், முதலாவதும் பெரும்போக்காயிருப்பதுமாகிய இன அடிப்படையிலான இன அடையாள வாக்குள் அல்லது அரசுக்குஎதிரான வாக்குகள் எனப்படுபவை உரிய விதத்தில் தூண்டப்பட்டு திரட்டப்பட்டாதவிடத்து வாக்களிப்பு விகிதம் குறைவாகவே இருக்கும். அண்மைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஒப்பீட்டளவில் குறைந்தளவு ஆர்வத்தையே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். வாக்களிப்பு விகிதம் குறையக் குறைய கூட்டமைப்பு எதிர்பார்க்கும் மக்கள் ஆணையின் மகிமையும் குறையும். பொதுவாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க ஜனநாயகங்களில் குறைந்த விகித வாக்களிப்பு எனப்படுவது ஆளும் தரப்புக்கே சாதகமானது. கடந்த சில தசாப்தங்களில் சில ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வன்முறையுடன் கூடிய வாக்களிப்பு விகிதம் குறைந்த தேர்தலை நடாத்துவது என்பது ஒரு உத்தியாகவே பார்க்கப்பட்டது. அதாவது, ஆளும் தரப்பே வன்முறைகளை உருவாக்கி அதன் விளைவாக வாக்களிப்பு விகிதத்தைக் குறைத்து அதன் மூலம் தேர்தல் முடிவுகளைத் தமக்குச் சாதகமாகத் திருப்ப முடியும் என்பது ஏற்கனவே, வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் பங்களாதேஷில் நடந்த சில தேர்தல்கள் தொடர்பில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்டு. மேலும் இலங்கைத்தீவில் பிரேமதாஸவின் காலத்தில் நிகழ்ந்த தேர்தல்கள் தொடர்பிலும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்டு. இலங்கைத்தீவில் அத்தகைய தூண்டப்பட்ட வன்முறை கலந்த குறைந்த வாக்களிப்பு விகிதத்தைக்கொண்ட தேர்தல்களிற்கான வாய்ப்புக்கள் முன்னைய காலங்களோடு ஒப்பீடுகையில், இப்பொழுது குறைவு. எனினும் கடைசியாக

> **ஆளும் தரப்பிடமிருந்து வரக்கூடிய நெருக்கடிகள் குறைவாக இருக்குமாயிருந்தால் அரசுக்கு எதிரான பெருமெடுப்பிலான ஒரு எதிர்ப்பு அலைக்குரிய வாய்ப்புக்களும் குறைவாகவே இருக்கும்.**

நடந்த உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தலின்போது நிகழ்ந்த சில வன்முறைகள் கூட்டமைப்புக்குச் சாதகமான ஓர் அரச எதிர்ப்பலையை உருவாக்கியதாக கருதும் விமர்சகர்களும் உண்டு.

இத்தகைய ஓர் பின்னணியில் வரப்போகும் மாகாண சபைத் தேர்தலில் ஓர் இன அலையானது இரண்டு விதமாகத் தோற்றுவிக்கப்படலாம். முதலாவது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும் அதன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் பரப்புரை உத்திகளும், இரண்டாவது கூட்டமைப்பிற்கு எதிராக ஆளும் தரப்பிடமிருந்து வரக்கூடிய நெருக்கடிகள். இத்தகைய நெருக்கடிகள் வாக்காளர் மத்தியில் ஒருவித திடீர் அரச எதிர்பலையை உருவாக்கக்கூடும்.

முதலாவதாக, கூட்டமைப்பின் பிரசார உத்திகள் மூலம் தோற்றுவிக்கப்படக்கூடிய ஓர் வாக்களிப்பு அலை பற்றியது. வன்தேசியத் தடத்திலிருந்து விலகி மென்தேசியத்திற்குத் தலைமை தாங்க முற்படும் கூட்டமைப் பானது எத்தகைய தெளிவாக இறுதி இலக்கை முன்வைக்கப்போகிறது என்பது முக்கியமானது. தலைமைத்துவம் தென்தேசியவாதிகளின் பிடியில் இருந்தாலும் ஏனைய வேட்பாளர்களைப் பொறுத்தவரை வன்தேசியத் தடத்துடன் தொடர்புடையவர்களும் உண்டு. இது ஒரு வாக்குவேட்டை உத்திதான். ஆனால், இந்த உத்தி மட்டும் ஓர் அலையைத் தோற்றுவிக்க உதவுமா?

பேரழிவுக்கும், பெரும் பின்னடைவுக்கும் பின்னரான ஒரு காலகட்டத்தில் கூட்டுக் காயங்களினாலும், கூட்டு மன வடுக்களினாலும் துன்புறும் ஒரு மக்கள் திரளிற்கு கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஓர் அரசியலை மென்தேசியவாதிகளால் முன்னெடுக்க முடியுமா? அதற்குத் தேவையான திடசித்தமும் தீர்க்கதரிசனமும் ஜனவசியமும் மிக்க தலைமைத்துவத்தை மென்தேசியவாதிகளால் வழங்க முடியுமா?

இவ்விதமாக கூட்டமைப்பானது இன அடையாள வாக்களிப்பு பாரம் பரியத்தின் தொடர்ச்சியாக ஓர் அலையைத் தோற்றுவிக்கத் தவறின் வாக்களிப்பு விகிதம் விமரிசையாக இருக்காது. அதேசமயம் ஆளும் தரப்பிடமிருந்து வரக்கூடிய நெருக்கடிகள் குறைவாக இருக்கமாயிருந்தால் அரசுக்கு எதிரான பெருமெடுப்பிலான ஒரு எதிர்ப்பு அலைக்குரிய வாய்ப்புக்களும் குறைவாகவே இருக்கும். எனவே, இப்போது கூட்டமைப்பின் முன்னுள்ள பிரச்சினையெல்லாம் வாக்களிப்பு விகிதத்தை அதாவது மக்களின் பங்களிப்பை அதிகரிப்பது எப்படி என்பதே.

அப்படி, மக்களின் பங்களிப்பு அதிகரிக்கும் போது தமிழ் ஜனநாயகச் சூழல் ஒப்பீட்டளவில் மேலும் பலமடையும். மென்தேசிய வாதிகளுக்கும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டவல்ல ஒரு வலிமையான மக்கள் ஆணை கிடைக்கும். தமிழ் மக்கள் ஏற்கனவே, பல தடவைகள் மிதவாதிகளுக்கு அத்தகைய நிராகரிக்கப்படவியலாத மகத்தான மக்கள் ஆணையை வழங்கியிருக்கிறார்கள். வட்டுக்கோட்டைத்தீர்மானத்திலிருந்து இது தொடங்குகிறது. அதாவது மக்கள் எப்பொழுதும் தெளிவாகத்தான் சிந்திக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகள்?

நமது முரசொலி
முரசொலி Namathu Murasoly வார இதழ்
முழக்கம் - 01
இல.:18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மனி வீதி நல்லூர்.
E-mail: namathumurasoli@gmail.com, Tel:0773673829

## முதற்படி...

வணக்கம்!

தமிழ் ஊடகப் பரப்பில் பல்வேறு தினங்களில் அவர்கள் சார்ந்த தளங்களில் பல ஊடகங்களின் வரவு வாசகர்களின் மனங்களை மலினப்படுத்தியுள்ளன. புதிய வரவாக நமது முரசொலி வார இதழ் மூலமாக வாசகர்களைச் சந்திப்பதில் பெரு நிறைவடைகின்றோம். வாசகர்கள் எமக்களிக்கும் ஆதரவும், அரவணைப்புமே எமது வெற்றிக்கும், முரசொலியின் இருப்புக்கும் முதல்படியாகும்.

"நேற்றுப்போல் இன்று இருக்கும், இன்றுபோல தான் நாளையும் இருக்கும் இதனை மாற்ற யாரால் முடியும்." எனக் குதர்க்கம் பேசியே குளத்தடியில் குந்தியிருந்து அரட்டை அடித்தான் ஒரு இளைஞன்.

"தினம், தினம் புதிதாய் ஒரு நாள் பிறக்கிறது, ஒரு நாளுக்கு ஒரு மாற்றம், தேதிக்கொரு நிகழ்வு என சூழலில் காணும் மாற்றத்தில் இயற்கையின் தோற்றத்தை, வளங்களை இரசித்து அதையே எமது வளர்ச்சியின் வளமாக்கிக் கொள்ள இதுவே நேரம். இதுவே காலம்" என முயற்சியின் முன்னேற்றத்தைத் தினமும் அளந்து மகிழ்வடைவான் இன்னோர் இளைஞன். இதுவே நம்பிக்கையூட்டும் செயலாக மாறும்.

இவர்கள் இருவரும் வாழும் சூழல் எப்படி இருக்குமென மனக்கண்களில் மதிப்பிட்டுப் பாருங்கள். முன்னையவர் பிறருக்கு மட்டுமல்ல, தனக்கும் பெறுமதி இல்லாதவராக இளமையிலும் தன்நம்பிக்கை இழந்து, முதுமையிலும் முனங்கலுடன் முடங்கியிருக்க முனைவான்.

பின்னையவன் தன் வாழ்வில் மாற்றத்துடன், தன் சூழலிலும் முக்கியமானவனாக சமூகம் தேடித்தெரிந்து முன்மாதிரிகை செயல்களால் முன்னேற்றம் காண்பதை அச்சூழலிலே வெளிப்படுத்தி அழகு சேர்ப்பான். இதில் முன்னவனா? பின்னவனா? நீங்கள் என்பதனை மதிப்பிட்டு, எதைச் செயற்படுத்தினோம்? எப்போ செயற்படவில்லை? என்று எமக்குள் கணிப்பிடும்பொழுதுதான் இளமையின் இரகசியம் உணரப்படும். அதன் வெளிப்பாடுகள் ஊராலும் மதிக்கப்படும்.

சோம்பி இருப்போரைத் தட்டியெழுப்பும் கூட்டு முயற்சிகள், சிந்தனைத் தூண்டல்கள் கலைகளாக, விளையாட்டாக, பொதுவேலை நிகழ்வுகளாக, பரிணாமம் பெறும்போது துடிப்புள்ள இளைஞர்களின் பங்களிப்பு, தான்வளரும் சூழலின், பண்பாட்டு சமூகவேர்களின் ஊற்றுக்களைத் தேடி பலமான செயல்வடிவங்களாக வெளிப்படுத்தப்படும். அங்கே துடிப்புள்ள இளையோரின் கடின உழைப்புக்கள் பலரை உருவாக்கியிருப்பதை பயனுள்ளதாக்கி சமூகத்தை ஒளியூட்டும் என்பதனை இளையோரின் செயல்களே வெளிப்படுத்தும்.

எமது மண்ணின் பல்வேறு நிகழ்வுகள் எல்லோர் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் வெட்ட வெட்ட தளைக்கும் மரம்போல, வேர்களில் இருந்து வீறுடன் உயிர்ப்பூக்களை வெளிப்படுத்தும் சக்தியே எமது மண்ணின் தனித்துவம். அழிப்புக்கள், எரிப்புக்கள், அவலங்கள், அபகரிப்புக்கள், பாதுகாப்பின்மைகள் இப்படி எத்தனையோ தடைகள் வந்தன. இவற்றை எதிர்கொள்ள கற்ற பாடங்களைக்கொண்டு தடைகளைத் தாண்டும் சக்தியோடு வாழும் இனத்தின் இளமைத் துடிப்புக்களே மறுமலர்ச்சிக்கான வித்துக்கள்.

தனித்திருந்து, தன்நம்பிக்கை இழந்து, வாழ்ந்தவர்கள் தமது முகவரியை இழந்து சூழலை மறந்து தனக்கும் மற்றவருக்கும் தொடர்பற்ற சமூக சீரின்மையிலும் தனிமையிலும் வாழ்வோரை வாழ்வின் சுவை உணர ஒன்றுசேர்த்து, புதிய தலைமைகளையும் உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இன்றைய ஊடகங்களுக்கு உண்டு. புதிய தலைவர்களை அறிமுகப்படுத்துவோம்; ஏற்றுக்கொள்வோம். தூரநோக்குடன் ஊடக சக்தியை பயனுள்ளதாக்கி மறுமலர்ச்சிக்கான சமூகத்தை உருவாக்கி, உருவாவோம். இவை எம் சமூகத்துக்கு மட்டு மல்ல எம் தேசத்துக்குமான, தலைமைத்து வத்துக்கான வெற்றிடத்தை நிரப்பும் முதற்படியாக்குவோம்.

# நிராகரிப்புக்கு இன்னும் தாமதம் ஏன்?

**– பார்த்தீபன்**

மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் இந்தக் காலத்தில், 13ஆம் திருத்தத்தையும், மாகாணசபை முறைமையையும் தமிழர்கள் எந்தவொரு அர்த் தத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்கின்றதொரு வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. உத்தி யோகபூர்வமாக இத்தேர்தலில் போட்டியிடக்கூடாதென்றும், மாகாணசபையை தமிழர்கள் ஏற்றுக் கொண்டதற்கான எந்தவொரு புறக்குறிப்பையும், தேர்தல் மூலம் காட்டிவிடக்கூடாதென்கின்ற வாதத்தின் பின்னணியில் இருக் கின்ற நியாயங்கள் எவை? ஏன் மாகாணசபை முறையை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது பற்றிய விடயங்களை சற்று ஆய்ந்து பார்ப்பது நல்லதும், பொருத் தமானதுமே.

13ஆம் திருத்தமும், மாகாணசபை முறையும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட் டவை. ஆதலால் அந்த ஒப்பந்தத்தை மையமாக வைத்தே இப்பிரச்சினையை மதிப்பிடுதல் வேண்டும்.

## "மாகாணசபை முறைமை ஓர் தீர்வற்ற தீர்வு"

இலங்கை-இந்திய ஒப்பந் தத்தின் மகத்துவம் பற்றி இந்தியா பெருமளவில் பெருமைசாற்றி இருந்தது. தமிழ்மக்களின்தேசிய இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும் பொருட்டே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால், தமிழ் மக்களின் தேசிய அரசியல் நலன்களை எந்த வகையிலும் பேணுவதாகவோ, பிரதிபலிப்பதாகவோ இது அமைந் திருக்கவில்லை. தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையைச் சரியான முறையில், கோணத்தில் இந்த ஒப்பந்தம் அணுகியிருக்கவில்லை.

தமிழ் மக்களது பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினை. ஒரு தேசிய இனத்தின் அடிப்படையான அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினை. பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலம், தனிச்சிறப்புடைய கலாசாரம், மகத்தான தாய்மொழி மற்றும் வாழ்க்கை முறைமை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வர லாறு என்று பல பண்புகளாலும், பரி மாணங்களாலும் ஒரு தனித்துவமான தேசிய இனமாகப் பார்க்கப்படுவதே தமிழினம்.

ஒரு தேசிய இனத்திற்குத் தனது அரசியல் விதியைத் தானே தீர்மானிக்கும் உரிமை, தகைமை உண்டு. ஐ.நா சபை சாசனமும், சர்வதேச சட்டங்களும் இதனை அங்கீகரித்துள்ளன. பல்வேறு நாடுகளின் போராட்டங்களின் போதும் இது அங்கீகரித்து, உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய இனம் ஒன்று உரித்தான சுயநிர்ணய உரிமை தொடர்பானதே, தமிழர்களின் அரசியல் பிரச்சினை. இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆயுதப்போராட்ட மும் இதற்காகவே. சுருங்கச்சொல்லின் ஆயுதப்போராட்டம் நடைபெற்றதே சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கே. ஆனால், இந்த ஒப்பந்தம், அத்தகைய போராட்டத்தையே கொச்சைப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது. தமிழர்களின் பிரச்சினையை ஒரு தேசிய இனத்தின் பிரச் சினையாகப் பார்க்காமல், மாறாக, சிறுபான்மையினரின் பிரச்சினையாகவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கருத்திற்கொண்டது. இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்ற வரைவிலக்கணங்கள்கூட உண்மையான அர்த்தத்தை மழுங்கடிக்கின்ற மாற்றுப் பதங்களாகவே காணப்பட்டன. பல்லின சமுதாயங்கள் வாழும் இலங்கையில் தமிழர்கள் ஒரு இனக்குழுமம் என்ற வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டு இருந்தனர். ஒப்பந்தத்தையும், அதன்கீழான 13ஆம் திருத்தத்தினையும் ஏற்றுக்கொள்வதானது இந்த வரைவிலக்கணங்களை ஏற் றுக்கொள்வதாகவல்லவா கருதப் படும்? தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன சற்றும் கருத்திற் கொள்ளப்பட்டிராத ஒப்பந்தத்தை எவ்வாறு தமிழர்கள் ஏற்பது?


அத்துடன், ஒரு இனத்தின் அரசியல் சுதந்திரத்திற்கும், சமூகப் பொருளாதார எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், இனமொன்றின் தொடர்ச்சியான உயிர்வாழுகைக்கும் நிலம் அடிப்படையானது. இதனாலேயே பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலப்பரப்பினைத் தமிழர்கள் தங்கள் பூர்வீகத் தாய்நிலம் என்று கருதுகின்றார்கள்; உரிமம் கொண்டாடுகின்றார்கள். இதில் தவறேது? இதனடிப்படையில் தான், பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு மாகாண நிலப்பரப்பு என்றுமே தமிழர்களுடையது என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், இந்த நியாயத்தை இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளத் தவறியிருந்ததுடன், அக்கோரிக்கையை நசுங்கச் செய்யும் சிங்களக் குடியேற்றங்களையும் நியாயப்படுத் துகின்ற வகையில் அமைந்திருந்தது. அத்துடன் வடக்கையும், கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாகப் பிரித்து வைத்தது டன், அவற்றிற்கு இடையில் வெறும் நிர்வாக இணைப்பிற்கு மட்டும் ஒரு சூழ்நிலைசார் சந்தர்ப்பத்தை தற்காலிகமான காலப்பகுதிக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இந்த சூழ்நிலைசார் சந்தர்ப்பம் இல்லாமல் போக, இன்று வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிந்து போயுள்ளதுடன், அடிப்படைக் கோட்பாடுகளையும் சிதைத்துப் போட்டிருக்கின்றது.

**"ஒரு இனத்தின் அரசியல் சுதந்திரத்திற்கும், சமூகப் பொருளாதார எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், இனமொன்றின் தொடர்ச்சியான உயிர் வாழுகைக்கும் நிலம் அடிப்படையானது. இதனாலேயே பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலப்பரப்பினைத் தமிழர்கள் தங்கள் பூர்வீகத் தாய்நிலம் என்று கருதுகின்றார்கள்"**

மேலும், வடக்கு கிழக்கு இணைந்திருப்பது பற்றி வாக்கெடுப்பிற்கான ஒரு ஏற் பாட்டை செய்திருந்தது. உண்மை யில் வரலாற்று ரீதியாகப் பிரித்துப் பார்க்க முடியாத தேசமொன்றின் ஆள்புலத்திற்கு சர்வசனவாக்குரிமையைக் கோருவது, நியாயமானதோ, சட்டப் பெறுமதி உடைய வழிவகையுமோ அல்ல.

ஆகவே, தமிழர்களின் அரசியல் கோட்பாட்டின் மூலாதாரங்களான தாய்நிலம், தேசியம், சுயநிர்ணயம் என்பன பற்றிய அடிப்படைய வாதங்களைப் புறந்தள்ளி உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும், அதன்கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையைத் தமிழர்கள் ஏன் ஏற்க வேண்டும்..?

# வடமாகாண சபைத் தேர்தல் மக்களுக்கு விடிவு தருமா?



## ஒரு கேள்வி பல முகங்கள்



**அங்கஜன் இராமநாதன்**
(ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு)

இந்தக் கேள்விக்கான பதில் யாருடைய கையில் மாகாண சபை கிடைக்கப் போகின்றது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. இன்றைய நிலையில் வட பகுதி மக்களுடைய தேவைகளையும், அவர்களுக்கான அபிவிருத்தியையும் இனங்காண வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். மக்களுக்கு கொடுக்க வேண்டியவற்றை கொடுப்பதற்கு தயங்கி நிற்பது நியாயமற்ற செயலாகின்றது. உயரத்தில் இருக்கும் இலக்கை அடைவதற்கு எட்டிக் குதிப்பதைக் காட்டிலும் ஏணி வைத்து ஏறுவதே சாலப் பொருத்தமானது. அந்த வகையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அனைத்து அபிவிருத்தி பணிகள், மக்களின் வாழ்வாதார தேவைகளுக்கான உதவித்திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்வதற்கு மாகாண சபை கட்டமைப்பு எமக்கு ஏணியாக அமையும் என்பதை தெளிவாக புரிந்து கொண்டவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

மாகாண சபையைக் கைப்பற்றி அதனை கையாளும் போது மக்களுக்காக முன்னெடுக்க கூடிய சேவைகளையும் நிறைவு செய்யக் கூடிய தேவைகளையும் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கையும் திராணியும் எமக்கு இருப்பதாலேயே நாம் தேர்தல் களத்தில் நிற்கின்றோம். இதுவரை காலமும் மக்கள் தெரிவு செய்த அரசியல் தலைமைகள் என்ன செய்தார்கள்? என்ன சொல்கின்றார்கள்? என்ற கேள்விகளின் ஊடாக அவற்றுக்கான பதில்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய தருணத்தில் நாம் இருக்கின்றோம். ஏனெனில் தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் வர்க்கமாக, ஏமாளிகள் கூட்டமாக நாம் இருந்து விட முடியாது. கடந்த காலங்களில் மக்களுடைய உரிமைகள், தேவைகளை பெற்றுக் கொடுப்போம் என வாக்குறுதிகளை கொடுத்து வாக்குகளை பெற்று பாராளுமன்றம் வரை சென்றவர்கள் இதுவரையில் என்ன செய்தார்கள்? வாக்களித்த மக்களின் நம்பிக்கைக்கு என்ன பதில்களை சொன்னார்கள்? அவர்கள் சொன்னதெல்லாம் 'எதுவும் கிடைக்கவில்லை', 'எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை' என்பது மட்டுமே. உண்மை அதுவல்ல. மக்களுக்கான தேவைகளை உங்களால் நிவர்த்தி செய்ய முடியவில்லை என்பதற்காக அவற்றை யாராலும் செய்து விடமுடியாது என்றாகி விடாது. மாகாண சபையின் மூலம் எதைப் பெற்றுவிடலாம் எனக் கேட்பதிலிருந்து அவர்களது இயலாமையை அவர்களே ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

மக்களுக்கான விடிவை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என அவர்கள் எண்ணினால் எதற்காக இத்தனை வேட்பாளர்களுடன் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. இதிலிருந்து அவர்கள் மீண்டும் மக்களை வார்த்தை ஜாலங்களினால் ஏமாற்றத் தயாராகி விட்டார்கள் என்பதும் தெளிவாகி விடுகின்றது. இத்தனை நாட்களாக எதிர்க்குரல்களை மட்டுமே கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் தொடர்ந்தும் அதையே செய்வோம் எனக் கூறியுள்ளார்கள். எனவே மக்கள், தமது நம்பிக்கைகளை மீண்டும் ஏமாற்றுக்காரர்களின் கைகளில் கொடுக்கப் போகிறார்களா? இல்லை இன்று வரை அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து அபிவிருத்திப் பாதையை கட்டியெழுப்பும் எங்கள் கைகளில் தரப்போகிறார்களா? ஆகையால் மாகாண சபை வட பகுதி மக்களுக்கு விடிவைத் தருமா என்பதை முடிவு செய்யப் போவது மக்களின் சரியான தெரிவே.



**சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன்**
(இலங்கை தமிழரசுக் கட்சி)

ஈழத்தமிழர்கள் செழுமையான மொழியையும், தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களையும், பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தொடர்ச்சியான நிலப்பரப்பையும் கொண்ட ஒரு தேசிய இனம். அந்த வகையில், இணைந்த வடக்குக் கிழக்கு எமது தேசம். இது போன்று சிங்கள மக்களின் வாழ்புலம் அவர்களது தேசம். இந்த இரண்டு தேசங்களினதும் இணைவுதான் இலங்கை என்னும் ஒரு நாடு. இதுதான் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை. இதைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலோ அல்லது இது காலவரையில் சிங்களப் பெருந் தேசியவாதத்தினால் நாம் எதிர் கொண்ட ஒடுக்கு முறைகளுக்கும், அழிவுகளுக்கும் உரிய பரிகாரமாகவோ மாகாணசபைகள் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், இதனை நாம் பகிஷ்கரிக்க முடியாது. மாகாண சபை, எமது தன்னாட்சி உரிமைக்கான போராட்டப் பயணத்தில் நாம் இப்போது எதிர் கொண்டுள்ள தவிர்க்க முடியாத ஒரு படிக்கல் என்பதுதான் யதார்த்தம். இலங்கையில் மாகாணசபை முறைமை ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, 1987ஆம் ஆண்டு இந்திய அரசு இலங்கையில் தலையிட்டு உருவாக்கிக் கொடுத்த ஒன்று. சிங்கள மக்களுக்கு அவர்கள் கேட்காமலேயே எல்லாவற்றையும் நிறைவேற்றித் தருவதற்கு இலங்கை அரசு தயாராக இருக்கும்போது அவர்களுக்கு மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பாக எந்த ஒரு கேள்வியும் இல்லை. ஆனால், எங்களுக்கு இருக்கின்றது. சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளும் வரை வடக்கு - கிழக்கு இணைந்து ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கும் என்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் வடக்கும் கிழக்கும் நிர்வாகரீதியாகதுண்டாடப்பட்டுவிட்டது. ஒரு சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகரை நியமிக்கும் எல்லைவரை மாகாணசபைக்கு அதிகாரம் உண்டு. ஆனால், இந்த மட்டுப்படுத்தப்பட்ட காவல்துறை அதிகாரத்தையும் எப்பாடுபட்டாவது மாகாணசபையிடம் இருந்து பறித்துவிட வேண்டும் என்றே இலங்கை அரசு கங்கணம் கட்டுகிறது. இந்நிலையில் மாகாணசபையின் குறைந்தபட்ச அதிகாரங்களை நாம் செயற்படுத்த முனையும் போதுகூட அரசு ஆளுநரின் ஊடாகவோ, நேரடியாகவோ தலையிட்டுத் தடைகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம். இந்தத் தடைகளை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றோம் என்பதிலேயே எமது தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வு தங்கியுள்ளது. எமது முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்பது கசப்பான உண்மை. ஆனால், முள்ளிவாய்க்காலில் போர் முறியடிக்கப்பட்டபோது எமக்கான புதிய கதவுகளைத் திறந்து வைத்துவிட்டுத்தான் முடிவுக்கு வந்திருக்கிறது. போராளிகளினதும் பொதுமக்களினதும் கொத்துக்கொத்தான மரணங்களும், மாறிவரும் உலக அரசியலும் எம்மீது சர்வதேசத்தின் அக்கறையை, கரிசனையைத் திருப்பிவிட்டிருக்கிறது.

இந்நிலையில், மாகாணசபையை, இலங்கை அரசின் கொடூரமான இனவாத சுயரூபத்தைச் சர்வதேச அரங்கில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக நாம் பயன்படுத்தமுடியும். மாகாணசபையை நிர்வகிக்கும்போது அரசு தடைகளை மேற்கொண்டால் எதிர்த்து நாம் ஜனநாயக ரீதியாகப் போராடும் நிலைக்குத் தள்ளப்படுவோம். வெலிவேரியாவில் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான சுத்தமான தண்ணீரைக்கேட்டுப் போராட்டம் நிகழ்த்திய தனது இன மக்களுக்கே துப்பாக்கிகளால் பதில் சொன்ன அரசு எமது ஜனநாயக ரீதியான போராட்டங்களையும் ஒடுக்கவே முனையும். அப்போது, எமது ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று நிராகரித்த உலக நாடுகளால், எமது ஜனநாயகப் போராட்டத்தின் பின்னால் உள்ள நியாயத்தன்மையை நிராகரிக்க முடியாமற்போகும். இந்த வகையில் மாகாண சபையை எமது தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுக்கு ஒரு படிக்கல்லாக நாம் பயன்படுத்த முடியும்.



**பசுபதி அரியரத்தினம்**
(இலங்கை தமிழரசுக் கட்சி)

மக்களின் நீண்டகால அபிலாஷைகளை ஒலிக்கச் செய்கின்ற, களமாக மகாணசபைத் தேர்தல் அமையும் என நம்புகின்றேன். ஆனால், மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றாலும், நாம் கூறுகின்ற கருத்துக்களை இலங்கை அரசாங்கம் செவிமடுக்கும், அதனை நடைமுறைப்படுத்தும் என நான் நம்பவில்லை. ஏனெனில், இதுவரை அரசாங்கம் எமது குரல்களைச் செவிமடுத்து நாம் கூறியவற்றை நடைமுறைப்படுத்தி இருந்தால் நாம் அதன்மீது நம்பிக்கை கொள்ளலாம். ஆனால், சுதந்திரம் பெற்ற காலம் முதல், பாராளுமன்றத்தில் நாம் வற்புறுத்தியவை எவையும் கருத்திற் கொள்ளப்படவில்லை.

13ம் திருத்தத்திற்கூட, தற்போது கொண்டுவர எத்தனிக்கும் திருத்தம் உண்மையில் எப்போதோ கவனித்திருக்க வேண்டிய விடயம், ஆனால் வடமாகானத்திற்கான தேர்தலை அறிவித்த பின், அது பற்றிப் பேச ஆரம்பித்திருப்பது, வடமாகாண சபையின் நிர்வாகத்தினை எந்தளவுக்கு முடங்கச் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கங்கணம் கட்டியுள்ளதென்பதை மக்களும், சர்வதேச சமூகமும் உணர்ந்துள்ளது. அதேநேரம், அரசாங்கம் இத்தேர்தலின் மூலம் மக்கள் தம் பக்கம் நிற்கின்றார்கள் என்பதைக் காட்ட முயலுகின்றது. அரசாங்கம் விருப்பமில்லாமலேயே தேர்தலுக்குச் சம்மதித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே மக்கள் ஆதரிப்பார்கள் என்று அறிந்து, அதனைத் தடுக்கப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றது. எமது கட்சி வேட்பாளர்களை நேரடியாக அச்சுறுத்துகின்றது. பிரச்சாரம் செய்யமுடியாதபடி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தேர்தல் அறிவுறுத்தல்களில் வேட்பாளர்கள் வாக்காளர்களை வாக்களிக்கக் கோரமுடியாது என்று கூறப்பட்டுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள நடைமுறைகள் இங்கு எமக்கு மறுக்கப்படுகின்றன. இதனை விட தேர்தலை இரத்துச் செய்யலாமே? இந்த அரசாங்கம் எவ்வாறு மக்களுக்கு நன்மை செய்யப்போகின்றது? இருப்பினும், இத்தேர்தல் வடமாகாண மக்களுக்கு முக்கியமானதொன்றே. யார்பக்கம் அவர்கள் நிற்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்ட முடியும். நாம் மகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றிய பின்னர் அதன் ஒவ்வொரு கூட்டத்திலும், தமிழ்த்தேசியம் பற்றி, விடுதலை பற்றி, மீட்கமுடியாத எமது நிலங்கள் பற்றிக் குரல் கொடுக்க இத்தேர்தல் களம் அமைக்கும். ஆளுநரின் கட்டுப்பாடுகள் நிறையவே நிர்வாகத்தில் காணப்படும், எனினும் அத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படினும், நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த முயலுவோம். அத்தடைகளினால் மாகாணசபை ஒன்றினால் நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாதுள்ளதை நாம் எடுத்துக் காட்டுவோம். இது ஏனைய மகாணங்களுக்கும் உந்து சக்தியாக அமைவதுடன், அவர்கள் எமது மாகாணத்தை உற்றுப் பார்க்கும்படியாகச் செய்வோம்; அவர்களும் எமக்காகக் குரல் கொடுக்கச் செய்வோம். ஒட்டுமொத்தத்தில் தமிழர்களுக்கு மட்டுமல்ல மொத்த மாகாணங்களுக்கும் புத்துயிர் அளிக்கும் தேர்தலாக இது அமையும். எமது பிரச்சினைகளைச் சர்வதேச அரங்குக்கும் ஒலிக்கச் செய்வதற்கு இத்தேர்தல் வழியை உண்டாக்கும் என நம்புகின்றோம்.



சுந்தரம்
டிவகலாலா
(ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு)

தமிழர் என்பதை விட தமிழ்பேசும் மக்கள் என்பதே சரியானது. ஏனென்றால் முஸ்லீம் சகோதரர்களைத் தவிர்த்து நாங்கள் பேசமுடியாது. இந்தக் கேள்விக்கான பதில் இரு அடிப்படைகளில் பேசப்படலாம். முதலாவது தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளின் அடிப்படையில் மாகாண சபை முறைமை முழுமையானதொன்றல்ல. எனினும் வேண்டாத ஒன்றுமல்ல. தற்போது அது மட்டுமே நடைமுறையில் அணுகப்படக்கூடியதாக - கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷை என்பது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார சுதந்திரமும் சமத்துவமும் கொண்ட வாழ்வுரிமை. மாகாண சபை முறையினை அடிப்படையாக - ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு இதனை நோக்கி நகர்வதற்கு இன்று மாகாண சபை தவிர்ந்த வேறு மார்க்கமெதுவும் கிடைக்கக் கூடியதாகவில்லை என்பதனால்தான் விடிவுக்கான மார்க்கமாக இதனைக் கருதவேண்டியுள்ளது.

அபிவிருத்தியை அடிப்படையாகக் கருதும் இன்னொரு நோக்கில் மாகாண சபை நிச்சயம் தமிழ் பேசும் மக்களுக்கு விடிவைத்தரும். மாகாணசபை தனக்கெனக் கொண்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் மாகாணத்தின்கல்வி, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தியையும், பொருளாதார - சமூகக்கட்டுமானங்களின் அபிவிருத்தியையும், போரினால் நலிவுற்றோரின் நலன்களை மேம்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதனையும் மேற்கொள்ள முடியும். இவ்விடயங்களில் இதுவரை மாகாணசபை குறிப்பிடத்தக்க அடைவுகளை அதிகம் வெளிப்படுத்தாமைக்குக் காரணம் மாகாணசபைச் சட்டத்தின் குறைபாடு அல்ல. மாகாண நிர்வாகத் தலைமை மேலும் திறன்மிக்கதாக அமையவேண்டியிருப்பதுடன் திறனும் அர்ப்பணிப்பும் சமூக அக்கறையும் கொண்ட அரசியல் தலைமை தெரிவு செய்யப்பட வேண்டியது மாகாண சபையின் வெற்றிக்கு மிக அவசியமானது. இவ்வாறான தெரிவுமூலமே மக்கள் தமக்கான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

அபிவிருத்திக்கான தளமாக மாகாண அரசியலும், அரசியல் அபிலாஷைகள் பற்றிய கலந்துரையாடலுக்கான தளமாக தேசிய அரசியலும் அமைவதே பொருத்தப்பாடானது.



எம்.கே.சிவாஜிலிங்கம்
(இலங்கை தமிழரசுக் கட்சி)

அடிப்படையில் மாகாண சபை தமிழர்களின் அரசியல் அபிலாஷைக்கு எந்தவகையிலும் நியாயமான ஒருதீர்வாக அமையாது. அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கான ஆரம்பப்புள்ளியாக வேண்டுமானால் இதனைப் பயன்படுத்தலாம். ஐக்கிய இலங்கைக்குள், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த, மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படாத ஒரு சுயாட்சிக்கட்டமைப்பு - இணைப்பாட்சி முறைமையே தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு குறைந்த பட்சதீர்வாக இருக்க முடியும். தமிழர்கள் தமக்கான ஒரு தீர்வாக மாகாண சபை முறைமையினை ஏற்றுக்கொள்ளாத போதிலும், மாகாணசபைத் தேர்தலின் ஊடாக உலகிற்குப் பல செய்திகளை நாங்கள் கூற விரும்புகின்றோம். சுயாட்சிக்கட்டமைப்பு முறையிலான ஆட்சி முறையினையும் நியாயமான அதிகாரப் பகிர்வினையும் ஏற்றுக்கொள்வதற்கான, தமிழர்கள் காட்டுகின்ற நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவே மாகாண சபைத்தேர்தலை சர்வதேசம் நோக்க வேண்டும். தமிழர்கள்விரும்புகின்ற இந்த குறைந்த பட்சதீர்வினைக்கூட பேரினவாதிகள் நிராகரிப்பார்களேயானால் அதனை சர்வதேசத்திற்கு எடுத்துரைத்து நாங்கள் அடுத்த கட்டத்தை நோக்கியும் நகரலாம். எங்களுடைய மக்கள் இன்று நொந்து போயிருக்கிறார்கள். அவர்களுக்கான கல்வி, சுகாதாரம், மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஒரு ஊடகமாக மாகாண சபையினை நாங்கள் பயன்படுத்தலாம். அங்கவீனமுற்றவர்கள், அநாதரவாக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுப் பணிகளை இன்று ஒரு நிறுவனமயப்படுத்தி மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த விடயங்களை அரசாங்கமோ, அரசசார்புக் கட்சிகளோ மேற்கொள்ளப்போவதில்லை.

இன்று வடக்கில் வெலிஓயாவிலிருந்து முறிகண்டிவரையில் இராணுவக் குடியிருப்புக்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. வலி-வடக்குப் பிரதேசத்தில் 6,500 ஏக்கருக்கு அதிகமான தமிழர்களின் காணிகளை இராணுவம் சுவீகரித்து நிரந்தரமான படை முகாம்களை அமைத்து வருகின்றது. எனவே மாகாண அரசியல் அதிகாரம் அவர்கள் கைகளுக்கு செல்லவிடாமல் மாகாண சபையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுவதன் மூலமே தமிழர்களுக்கான குறைந்தபட்ச அபிவிருத்தியையேனும் ஏற்படுத்துவதுடன் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் அரசிற்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தும் களமாகவும் மாகாண சபையைப்பயன்படுத்த முடியும்.

பேரினவாதத்தின் முகத்திலே ஓங்கி அறைவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கான ஒருகளமாகவும் தமிழ்மக்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தினால் மாகாண சபைத் தேர்தல் எமது விடிவிற்கான ஒரு புதிய ஆரம்பமாக அமையும்.



கந்தசாமி
பிரகலாதன்
(ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு)

கடந்த காலம் முதல் எங்கள் அரசியல் தலைவர்கள் தங்களது சொந்த நலனுக்காகவே அரசியலை நடாத்தியுள்ளார்கள். சுதந்திரம் பெற்ற காலத்திலும் சரி, ஆயுதப்போராட்டம் நடந்த காலத்திலும் சரி, குறுகிய நோக்கம் கொண்டு, மக்கள் பற்றி எந்த விதத்திலும் சிந்திக்காமல், தங்களது பசப்பு வார்த்தைகளால் அரசியல் நடாத்தி வந்தார்கள். எமது அரசியல் வரலாற்றில் 2 சந்தர்பங்கள் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்திருந்தன. ஒன்று: இந்திய-இலங்கை ஒப்பந்தம், இரண்டாவது: விடுதலைப் புலிகள்-அரசாங்கப் பேச்சுவார்த்தைகள். ஆனால் அவை யாவும், சரியான காரணங்களின்றி, தூர தரிசனம் இன்றித் தூக்கி எறியப்பட்டன. இதனால் நொந்து, நிர்க்கதியாகியுள்ளவர்கள் மக்களே; தலைவர்கள் அல்லர். இழப்புக்களைச் சந்தித்தவர்கள், நான் உட்பட சாதாரண மக்களே. நான் சந்தித்த இழப்புக்களையும், நோவையும் போன்று வீரம் பேசுகின்ற தலைவர்கள் கண்டிருப்பார்களா? அவர்களை விட உரிமை கோர எனக்குஉரிமையுண்டு. நாம்முழுக்கமுழுக்க எதிர்ப்பு அரசியலை கொள்கையின்றி செய்து வருவதால் ஒன்றையும் அடைந்துவிடப் போவதில்லை. ஆனால், நாம் புத்திசாதுரியமாக இலங்கை அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்றி எமது கொள்கைகளை நிலைநாட்ட வேண்டும். மாகாணசபைக்கூடாக ஒன்று நிலையான அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புதல், இரண்டு, அதற்கூடாக நிலையூன்றப் பெற்று எமது உரிமைகளையும் வென்றெடுக்க உறுதிபூண்டுள்ளோம். 13ம் திருத்தத்தையும், மாகாண சபையையும் கையிற்கொண்டு முன்னேறிச் செல்ல முடியும் என நம்புகின்றோம். எமது மாகாணத்தின் கல்வி, சமூக ஒருமைப்பாடு, கலை மற்றும் கலாசார மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு என்பவைகளையும் மேம்படுத்தி, மக்களின் உரிமைகளை வென்றெடுக்க மாகாணசபை கைகொடுக்கும். மக்களின் தெளிவான தீர்மானம் இவைகளை நனவுகளாக்கும்.



நான் இவ்வுலகில் ஒரு முறைதான் பயணம் செய்வேன் எனவே மரணம் வந்து என்னைத் தழுவுமுன் என்னாலான எல்லா நல்ல செயல்களையும் செய்ய முனைவேன் ஏனெனில் இந்த உலக வழியாக நான் மீண்டும் இன்னொரு தடவை வரப்போவதில்லை என்ற விருது வாக்குடன் தனிநாயகம் அடிகள் 1938இல் உரோமையில் குருப்பட்டம் பெற்றார்.

ஒரு மொழிக்கு முதன் முதலாக மாநாடு நடாத்திய பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும் 1966ஆம் ஆண்டு முதலாவது உலகத் தமிழாராட்சி மாநாட்டை மலேசியாவில் கூட்டினார் 22 நாடுகளைச் சேர்ந்த 132 பிரதிநிதிகளும் 40 பார்வையாளர்களும் இணைந்து கொண்டனர்.

இரண்டாவது அனைத்துலக தமிழாராட்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது. மூன்றாவது மாநாடு பிரேஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசில் 1970இல் நடத்தப்பட்டது. நான்காவது மாநாடு 1972இல் யாழ் விரசிங்கம் மண்டபத்தில் தனிநாயகம் அடிகள் முன்நின்று நடாத்தித்தந்தார். 1961இல் தமிழ் மக்களின் கொந்தளிப்பு ஏற்பட்ட ஆண்டாகும்

# தனிநாயகம் அடிகளாரின் அரசியற் சிந்தனைகள்

வடக்கிலும், கிழக்கிலும் சிங்கள் மொழி ஆதிக்கத்தை திவிரப்படுத்த அரசு திட்டமிட்டிருந்தது தந்தை செல்வநாயகம் சத்தியாக் கிரகம் இருந்தபோது ஆதரவு திரட்டிய தனிநாயகம் அடிகள் அதோடு தமிழர்களின் உரிமையையும் சிங்கள் மக்களின் மேம்பாட்டிற்காக தமிழர்கள் ஆற்றிய பணிகளை விளக்கி மும்மொழிகளிலும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு இனங்களுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்த பெரும் சக்தியாக செயற்பட்டார் இக்காலத்தில் பொலிஸ் குற்றப் பிரிவுப் பிரிவினால் தேடப்படுவராகவும் காணப்பட்டதாக தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை வரலாறும் பணிகளும் எனும் நூலில் காணப்படுகின்றது.

33 ஆண்டுகளுக்கு முன் தந்தை செல்வா நினைவுப் பேருரையை நிகழ்திய தனிநாயகம் அடிகள் இன்று இருபத்தியைந்து ஆண்டுகளுக்குப் பின் நாம் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளோம் நம் உரிமைகள் அனைத்தையும் இழந்து வாழ்கின்றோம் தந்தை செல்வா ஈழத் தனிநாட்டை தமிழ்ஈழத்தை அக்காலத்தில் கேட்கவில்லை ஆனால் நமக்கு இத்தனை ஆண்டுகளாக இளைத்து வந்த தீமைகளால் தனி நாடு கேட்கத் தூண்டப்பட்டோம் என குறிப்பிட்டுள்ளார்

தமிழர்களின் உரிமை எந்நிலைக்கு புறந்தள்ளப் பட்டுள்ளது என்பதை புரிந்துகொண்ட அதேவேளை தனிநாயகம் அடிகள் தமிழர் உரிமைகளை எவ்வகையிலும் இழப்பதற்கு தயாராய் இருந்தவரில்லை தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தது மட்டுமல்லாது இவ்வுரிமையைப் பெற கடுமையாக உழைத்த ஒரு தூய தமிழ் தேசியவாதியாக அடிகளாரை கோடிட்டு காட்டியிருந்தார் செ. அன்புராசா அடிகள். (தமிழ்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் தமிழ்சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றபோது தனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்).

தேசியம் எனும் வார்த்தை இன்று குறுகிய பொருளில் பார்க்கப்படுகின்றது தமிழ் தேசியம் என்ற பதத்தை தனிநாடு கோருவதாகவும் நாட்டைப் பிளவுபடுத்துவதாகவும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றது தமிழர் உரிமைக்காக தீவிரமாய் உழைத்தவர் என்பதுதான் உண்மை தனிநாயகம் அடிகளாரின் சிந்தனைகளை தமிழர்களாகிய ஒவ்வொருவரும் மனதிலிருத்தி செயற்படவேண்டும்.

இதே கருத்தை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் யாழ் திருமறைக் கலா

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

# இனியும் முட்செடிகள் முளைக்கலாம்

தம்பி! இனியும் பிரிவினையும் வேற்று மையும் பேசித்திரிஞ்சு பிரயோசனமில்லை. அவங்கள் மட்டும் இனவாதம் பேசயில்லை. அவங்கள் மொழிச்சட்டம் கொண்டு வந்து இனவாதம் பேசின மாதிரி எங்கடை ஆக்களும் நாட்டைப்பிரிப்பம், எல்லை போடக் கிளுவங்கதியால் தாருங்கோ எண்டு பேசி சனத்தை உசார்படுத்தி விட்டதின்ரை பலன்தான் எங்களை இண்டைக்கு சாம்பல் மேட்டிலை கொண்டுவந்து விட்டிருக்குது . இனி யெண்டாலும் இந்தக் கதையளை விட்டிட்டு சேர்ந்து போனாத்தான் எங்கடை சனத்துக்கு ஏதாவது கிடைக்கும். வாய்ப்புக்கிடைச்சால் நில்லும். அதாலை நாலு சனத்துக்கு நல்லது செய்யமுடிஞ்சால் செய்யும். இதிலை சரி பிழை யோசிக்கிறதுக்கு ஒண்டும் இல்லை."

**“யாருக்காகப் போராடினோமோ அவர்களால் புறக்கணிக்கப் பட்ட நிலையில் யாருக்கு எதிராகப் போராடினோமோ அவர்களால் ஆதரிக்கப்படுகின்றோம்” என்பதை நினைக்க அவமானமாகவும் வேதனையாகவும் இருந்தது.**

என்ற குலசேகரத்தாரின் பேச்சில் யதார்த்தம் இருப்பதாகப்பட்டது. கடந்த இரண்டு வாரங்களாக சரியென்றும் பிழையென்றும் மனம் அல்லாடிய விடயத்தில் ஒரு தெளிவு கிடைத்தது போல இருந்தது.

“எங்களை இண்டைக்கு சாம்பல் மேட்டிலை கொண்டுவந்து விட்டிருக்குது” என்பது எத்தனை சத்தியமான, நிஜமான வார்த்தைகள். போர் தந்த வலிகளை இதனை விட சுருக்கமாக, தெளிவாக எப்படிச் சொல்லமுடியும்.

போர் எவ்வளவு கொடுமையானது, எவ்வளவு வலி தரக்கூடியது என்பதை நான் நேரில் தரிசித்தவன் என்பதால், போர் என்பதை செய்திகளாக படித்துப் பார்த்து விட்டு எங்கள் உரிமைகளை மீட்க இன்னொரு போர் வேண்டும் என்று கூறும் நம்மவர்களைப் பார்க்கின்ற போது வேதனையாகவும் பரிதாபமாகவும் இருக்கும்.

கண் முன்னே இறந்துபோன உறவுகளின் உடல்களைக் கூடத் தகனம் செய்ய முடியாமல், தமக்குப் பின்னால் நாய்கூட எஞ்சாது என்ற நம்பிக்கையில், மணலை வாரி மூடிவிட்டு உயிருக்கு அஞ்சி ஓடியவர்களையும், தாய் இறந்தது அறியாது இறந்த தாயிடம் பால் குடித்த குழந்தையையும், கர்ப்பிணித் தாயும் நிறைமாத சிசுவும் அருகிலேயே கணவரும் துடிதுடித்து இறந்ததையும் நேரில் கண்ட என்னைப் போன்றவர்களால் இங்கு மட்டுமல்ல, உலகின் எந்த மூலையில் போர் நடந்தாலும் இனிமேல் ஆதரிக்க முடியாது.

இரண்டாயிரத்து ஒன்பதின் வைகாசி. வாழ்வின் இறுதியிலும் இறுதியான நாட்கள். ஊழித்தாண்டவத்தின் உச்சம். இமயமலை என்று நாங்கள் அண்ணாந்து பார்த்திருந்த பல விடயங்கள் கண்முன்னே பனிமலையாய் கரைந்து போக, சோகத்தையும், வாழ்வின் அத்தனை அங்கங்களும் உறவுகளும் பிடுங்கி எறியப்பட்ட காயத்தையும் சுமந்தபடி, மரத்துப்போன மனதோடு உயிர்மீண்டு, புனர்வாழ்வு முடிந்து வீடு வந்தபோது, மீளமுடியாத நரகத்தில் சிக்கிக்கொண்டது போன்ற பிரமையும், இழக்க முடியாத, இழக்கக் கூடாத மிகப்பெறுமதியான ஏதோ ஒரு பொக்கிஷத்தை இழந்து விட்டதான தவிப்பும், ஒரு ஏக்கமும், மனதில் முள்ளாக உறுத்தியது.

முன்னாள் போராளி என்ற காரணத்திற் காகவே எல்லோரும் என்னைப்பார்க்கவும் பேசவும் தயங்கிய சமூகத்தால்ஒரங்கட்டப்பட்ட, அந்த நாட்களில்என்னோடு பேசிய குடும்ப அங்கத்தவர் அல்லாத முதல் மனிதர் குலசேகரம். இந்தக் குறுகிய காலத்தில் என்னை சமூகச் செல்வாக்குள்ள மனிதனாக அடையாளப்படுத்தியதில் குலசேகரத்தாரின் பங்களிப்பு மிக அதிகம். குலசேகரத்தாரின் அறிமுகமும், ஒருமாறுதலையும் ஆறுதலையும் எதிர்பார்த்த என் உள் மனத் தேவையும் ஒன்று சேர கோயில் தொண்டர்சபை, சனசமூகநிலையம், என்று பொது அமைப்புக்களுடன்தொடர்பும் அறிமுகமும் வளர்ந்தது.

ஒருகாலத்தில் என்னை அழிப்பதன்மூலம் அழிவை விதைப்பதற்கு என நான் கற்றுக்கொண்ட மொழியும், திறன்களும், செய்காரிய நேர்த்தியும் இப்போது ஆக்கபூர்வமான தேவைகளுக்குப் பயன் பட, பலரின் பிரமிப்பிற்கு உள்ளானதால் பல பொது அமைப்புக்களில் நிர்வாகப்பதவி களும் ஊரில் செல்வாக்குள்ள இளைஞர் என்ற அந்தஸ்தும் கிடைத்தன. பொது வேலைகளில் ஈடுபடுவதற்கு அறிவு, திறன் கொண்ட பெரியவர்கள் பின்னிற்பதால்கிடைத்த சமூக தலைமைத்துவ இடைவெளி குறுகிய காலத்தில் என்னைப்பல விடயங்க ளில் முன்னிலை பெற வைத்தது. பல புதிய அறிமுகங்களும், இப்போது அரசியல் பிரவேசத்திற்கான அழைப்பும் கிடைத்தது.

விரோதத்தையும், பகைமையையும் விட்டுவிட்டு அபிவிருத்திக்காக ஜனநாயக அரசியல் வழிமுறையில் இணைந்து பணியாற்ற அருமையான சந்தர்ப்பம் என்று அவங்கள் சொல்வதையும் மறுக்க முடியவில்லை. அப்படி இணைவது சரியென்றும் பிழையென்றும் மனம் அல்லாடிய விடயத்தை குலத்தார் தீர்த்து வைத்து விட்டது போல இருந்தாலும் மீண்டும் தடுமாற்றம் வராது என்பதற்கும் உத்தரவாதமில்லை.

“குலமண்ணை! காணாமல் போனவை யின்ரை குடும்பங்கள், நாடுவேணும்எண்டு போராடினகுடும்பங்கள் இண்டைக்கு ஒருவேளை சாப்பாட்டுக்காக போராடுதுகள். அதைவிட இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கடை வீடுகளுக்குப் போகேலாமல் வீடுகளைப்பிடிச்சு வைச் சிருக்கினம். எங்கடை சனத்தின்ரை தீராத பிரச்சனையள் இன்னும் கனக்க இருக்குது. இதுகளைத் தீர்க்கிறதுக்கு விரும்புகினமில்லைப்போலை கிடக்குது...”

மீண்டும் மனம் அலை பாய்ந்தது. தோற்றுப்போன மனநிலையும், அச்சமும், இன்னமும் மிச்சமிருந்தன.

தம்பி! சந்தேகமும் அவநம்பிக்கையும் உடனே தீராது. அது மெல்ல மெல்லத்தான் தீரும். அவைக்கும் நம்பிக்கை வரவேணும். அப்பிடி வந்தால் அவங்களும் தங்கடை வீட்டை போயிடுவாங்கள் நாங்களும் எங்கடை




வீட்டை போகலாம். எல்லாம் உடனே வேணுமெண்டு அடம்பிடிச்சால் பிரச்சினை தீராது; சந்தேகமும் பயமும் தான் கூடும். எங்கடை பொடியள், எங்கடை பொடியள் எண்டு சொல்லித்திரிஞ்ச ஆருக்கும் உண்மையிலை எந்த அக்கறையும் இல்லை. உங்களை மாதிரி அக்கறையோடை யோசிக்கிறவை இப்பிடிக் கிடைக்கிற சந்தர்ப்பங்களைப் பாவிச்சு அதுகளுக்கு ஏதாவது விடிவைத்தேடுங்கோ”

குலத்தாரின் குரல் இப்போது கனத்தி ருந்தது. கடந்த காலத்தில்தவறிழைத்து விட்டோமோ? என்ற பச்சாத்தாபம் கலந்த ஏதோ ஒரு விபரிக்க முடியாத உணர்வுகளின் கலவை ஊற்றெடுத்து என்னை வேதனைப்படுத்தியது.

உண்மைதான், போராளிகள் ஒரு காலத்தில் தங்களுக்கு காவலாய் இருந்த வர்கள் என்றாலும் அவர்களை மக்கள் முட்செடிகளாகவே கருதுகிறார்கள், முற்றத்து மல்லிகையாக ஏற்பதில் தயக்கம் இருக்கிறது. பெற்றாரின் அன்பும், வளமான குடும்பப் பின்னணியும் எனது வாழ்க்கையை சவாலாக்கவில்லை. ஆனால் பல ஆண்டு களாக மண்ணுக்காக போராடிய பலர் இன்று ஒருவேளை உணவுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். உதவிகளுக்காக அரசிடம் கையேந்துகிறார்கள்.

“யாருக்காகப் போராடினோமோ அவர்க ளால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் யாருக்கு எதிராகப் போராடினோமோ அவர்களால் ஆதரிக்கப்படுகின்றோம்” என்பதை நினைக்க அவமானமாகவும் வேதனையாகவும் இருந்தது.

எல்லாக்காலங்களிலும் இப்படி நடந்தி ருக்கிறது. எல்லாளனுடைய ஆட்சியில் இருந்த மக்கள் துட்டகைமுனு மன்னனான போது அவனை மன்னனாக ஏற்று மகிழ்ச்சி யோடு வாழ்ந்திருக்கிறார்கள். யாரேனும் நாளை துரோகி என்று சொல்லலாம். ஆனால் ஆட்சியில் இருக்கின்ற மன்னனை நேசிப்பதும், அந்த அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருப்பதும் மக்களின் தர்மம். அதனால்தான் மக்களை எல்லோருக்கும் பொதுவானவர்களாக கருதி பொது மக்கள் என்கிறார்கள்... என்ற விதமாக சிந்திக்க, குலத்தார் சொன்னது சரியாகவே பட்டது.

..............

கனடாவில் இருந்து வந்திருந்த எனது அண்ணாவின் குடும்பத்துடன் அவர்கள் கனடா திரும்புவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக முழு இலங்கைக்கும் சுற்றுலா செல்வதெனவும் சுற்றுலா முடிவில் அவர்கள் கனடா திரும்புவதெனவும் தீர் மானிக்கப்பட்டிருந்தது. அந்தத்தீர்மானம் செயல் வடிவம் பெற்றிருக்க நான்கு நாட்கள் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளை தரிசித்தோம்.

“எவ்வளவு அழகான நாடு, அமைதியாக இருந்தால் இதைவிட சிறந்த தேசம் உலகத்தில் இருக்க முடியாது” அண்ணி ஆங்கிலத்தில் ஆதங்கப்பட்டாள்.

அனுராதபுரத்தில் எனது மொழியறிவு அதிகம் பயன்பட்டது. நான் சிங்களம் பேசுவது எனது குடும்பத்தில் பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது. குறிப்பாக அண்ணியும், எனது தங்கையும் அதிசயமாகவும் பெருமையாகவும் பார்த்தார்கள். அங்கிருந்தவர்களிடம் சிங்களத்தில் விபரம் கேட்டு அண்ணனின் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் விளக்கிச் சொன்னபோது, ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியையான அம்மா எனது ஆங்கிலத்தின் வேகத்தை பின்தொடர அதிகம் சிரமப்படு வது தெரிந்தது.

பெரிய பெரிய புத்தர் சிலைகளைப் பார்த்து அண்ணாவின் குழந்தைகள் அதிசயித்தார்கள் “யார் இவர்” என்று ஆங்கிலத்தில் விசாரிக்க, அம்மா புத்தர் ஞானம் பெற்ற வரலாற்றை கேள்வி வந்த மொழியிலேயே விபரிக்க இன்னும் அதிசயித்தார்கள்.

“இவர்தான் எங்கடை காணியளைப் பிடிக்கிறவர் எண்டதையும் சொல்லுங்கோ”

அண்ணா அதிக நேரத்தின் பின் வாய் திறந்து பேசினான். பேச்சில் வெறுப்பிருந்தது.

“அண்ணா புத்தர் தமிழுக்கோ, தமிழனுக்கோ விரோதியில்லை. உலகத்திலை பிறந்த ஞானிகளுக்குள்ளை புத்தரும், வள்ளுவரும், பெரியாரும் மட்டும்தான் சமயச் சார்பில்லாதவை. புத்தர் எந்தச் சாமியையும் கும்பிடவும் இல்லை, தன்னைக் கும்பிடச் சொல்லவும் இல்லை. புத்தரை ஆரும் விரோதியாய் பார்க்கலாம் ஆனால் தமிழன் பார்க்கக்கூடாது. புத்தசமயத்தை வளர்த்தவன் தமிழன் தான். உனக்குத் தெரியுமே பௌத்த சமயத்துக்கு மணிமேகலை எண்ட காப்பியம் செய்தவன் தமிழன். பௌத்தத்துக்கு அதைவிட்டால் கிடைக்கக் கூடியதாய் ஒண்டுமில்லை. கனபேர் அதைப் பழுதாக்கிப் போட்டாங்கள் அதுக்குப் புத்தர் பொறுப்பில்லை”

பதில் சொன்ன என்னை அதிசயமான பிராணியைப் பார்ப்பது போல வாய்பிளந்து பார்த்தான்.

“நீ எப்படா புத்த சமயத்திலை சேர்ந்தனி! புனர்வாழ்விலையே?”

**இஞ்சை எயார்ப்போட்டைச் சுத்தி வீடுகள் இருக்குது, சனங்கள் இருக்குது, அப்பிடியெண்டால் நாங்கள் ஏன் எங்கடை ஒட்டகப்புலம், பலாலிக் காணியளுக்கு போகேலாதெண்டு சொல்லுகினம்”**

அவனது கேள்விக்கு சிரித்த என்னை உறுத்துப் பார்த்தான், புத்தரை நேசிக்கின்ற ஒரு தமிழனைப் பார்க்க அவனுக்கு அபூர்வமாகவும் அதிசயமாகவும் இருந்தது.

“உண்மையாவே சேர்ந்திட்டியோ ?

என்று மீண்டும் சிரித்தான். பௌத்தம் சிங்களவர்களின் மதம் எனவும் பௌத்த மதமும் புத்தர்சிலைகளும் தமிழர் மீதான ஆக்கிரமிப்பின் குறியீடுகளாகவும் அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் சிரிக்க வைத்திருக்கலாம்.

சர்ச்சை அண்ணாவின் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்க அவர்கள் விடயமறிய ஆசைப்பட்டார்கள்.

அண்ணியிடமும் அவ்வளவாகத் தமிழ் புரியாத ஆதங்கம் தெரிந்தது.

"தமிழர் பகுதிகளில் புத்த தூபிகள் இருப்பது அவை சிங்களவர்களுடையது என்பதற்கு சான்றல்ல. தமிழர்கள் ஒரு காலகட்டத்தில் பௌத்தர்களாக வாழ்ந்தனர், அவை தமிழர்களின் உடைமைகள். தமிழ் நாட்டில்கூட பல இடங்களில் புத்தர்சிலை கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக தமிழகத்தின் பூர்வீகக்குடிகள் சிங்கள வர்களல்ல. முன்னொரு காலத்தில் இலங்கைத் தமிழர்களிடையேயும் புத்தர் அமைதியின் சின்னமாக அமர்ந்திருந்தார்.

புத்தரின் முன்னால் நின்று பௌத்தத்தைப் பற்றி ஆங்கிலத்தில் விபரித்த போது குழந்தைகளிடமும், அண்ணியிடமும் கேட்கும் ஆர்வம் தெரிந்தது. அண்ணனிடம் முன்னைய ஏளனத்தைக் காண முடியவில்லை. அருகில் இருந்த யாரோ இரு வெள்ளைக்காரர்கள் உன்னிப்பாகக் கேட்டார்கள், சுற்றுலா வழிகாட்டி என்று நினைத்திருக்க வேண்டும், விபரித்ததற்கு நன்றி சொல்லி பணம் எடுத்து நீட்டினார்கள். விடயத்தைச் சொன்னபோது சிரித்தபடி வருத்தம் தெரிவித்து விலகினார்கள்.

பயணத்தின் நிறைவு நாளில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அண்ணாவையும் குடும்பத்தினரையும் வழியனுப்பப் போனபோது தங்கையிடம் ஒருவித பரபரப்பு தெரிந்தது. ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது போல யன்னலுக்கு வெளியே தலையை நீட்டி அங்கிருந்த குடியிருப்புகளையும் கட்டடங்களையும் பார்த்தாள்.

"இஞ்சை எயார்ப்போட்டைச் சுத்தி வீடுகள் இருக்குது, சனங்கள் இருக்குது, அப்பிடியெண்டால் நாங்கள் ஏன் எங்கடை ஒட்டகப்புலம், பலாலிக் காணியளுக்கு போகேலாதெண்டு சொல்லுகினம்"

இதுவரையில் அவள் அதிசயமாகப் பார்த்த பார்வையின் அர்த்தம் இப்போது விளங்கியது.

இப்பவும் ஒட்டகப்புலக் காணியையும் பலாலிக் காணியையும் தங்கைச்சிக்கு சீதனம் குடுக்கப்போறன் எண்டுதான் கொம்மா சொல்லித் திரியிறா" என்று அப்பா சிரித்த சிரிப்பின் அர்த்தம் விளங்கவில்லை

……………

"எப்பிடித்தம்பி பயணங்கள்? அண்ணா குடும்பம் கனடாவிலை இறங்கி யிட்டினமாமோ?

ஊருக்குத் திரும்பிய மறுநாள் காலை சம்பிரதாயமான கேள்விகளோடு குலத்தார் வந்தார். வழமையான உரையாடல் முடிந்து, வந்த விடயத்திற்கு வந்தார்.

"தம்பி இண்டைக்கு இரண்டு மணிக்கு ஒரு கூட்டமிருக்குதாம். கொழும்பிலை இருந்து ஆரோ பெரியாக்கள் வருகினமாம். நேற்று காம்பிலை இருந்து வந்து தேடினவை. கட்டாயம் வரச்சொன்னவை, உமக்கும் பயணக்களைப்பு, நீர் போனால் நானும் வருவம் எண்டு நினைச்சனான், என்ன செய்வம்?

மறுக்க முடியவில்லை, மறுக்கமாட்டேன் என்பது அவருக்கும் தெரியும்.

கூட்டம் இரண்டரை மணிக்குத் தொடங்கியது. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நூறு பேர் வரையில் வந்திருந்தார்கள். கொழும்பில் இருந்து இரு உயர்நிலை அதிகாரிகள் வந்திருந்தார்கள். இருவரும் சிங்களத்தில் பேசினார்கள், கூடவந்திருந்த உரைபெயர்ப்பாளர் ஒருவர் தமிழில் மொழிபெயர்த்தார்.

பேச்சுக்கள் "வடக்கு கிழக்கு பகுதியில் சுதந்திரம் இல்லாத நிலையே அன்று காணப்பட்டது. ஆனால் இன்று மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் நாட்டை மீட்டெடுத்துள்ளோம். அபிவிருத்திக்காக இப்பிரதேச மக்களுக்கான சகல தேவைகளும் பெற்றுக்கொடுக்கப்படும்." என்ற விதமாக இருந்தது.

கூட்டத்தில் இருந்த போது என் தொலைபேசி பல தடவைகள் அமைதியைக்குழப்பாமல் அதிர்ந்தது. அம்மா எடுத்திருந்தார். மண்டபத்திலிருந்து இடையில் வெளியேற மீண்டும் அதிர்ந்தது.

"அம்மா! சொல்லுங்கோ"

"தம்பி! என்னத்தைப் பற்றிக் கூட்டம் நடக்குது, காணிக்கூட்டமே?

"இல்லை, ஏன் காணிக்கு என்ன கூட்டம்?"

"எங்கடை ஒட்டகப்புலம், பலாலி காணியெல்லாம் உரிமையாளரை அடை யாளங்காண முடியயில்லை எண்டு சொல்லி பிடிக்கப்போகினமாம். காணியளுக்கை நோட்டீஸ் ஒட்டுகினமாம். நாங்கள் ஊரிலை இருக்கிறம் எண்டு சொல்லி ஒருக்கால் கதை."

உரைகள் முடிந்த பின் பொதுமக்கள் அபிப்பிராயங்கள் கலந்துரையாடப்பட்டன. பலர் கேள்விகள் கேட்டார்கள் இன்னும் ஆறாத வடுக்கள் தீராத வேதனைகளோடு, முழுநாடுமே ஒன்றுசேர்ந்து துடைக்கவேண்டிய துயரங்களோடு, சமூகத்தின் ஒருபகுதி வாழ்ந்துகொண்டிருக்கிறது என்ற செய்தி அத்தனை கேள்விகளிலும் இருந்தது.

காணி சுவீகரிப்புப் பற்றி ஒருவர் கேட்க "சட்ட விரோதமாக எதுவும் நடக்காது" என்ற உறுதி மொழி கிடைத்தது. நான் அமைதியானேன்.

தனியார் காணிகளில் புத்தர் சிலைகள் பற்றி இன்னொருவர் கேட்க "அர்ப்பணிப்பாலும் தியாகத்தாலும் கட்டி எழுப்பப்பட்டுள்ள ஐக்கியத்தை எவரும் சீர்குலைக்க இடமளிக்கப் போவதில்லை. சிலர் பௌத்தர், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என மக்களைப் பிரித்துப் பார்க்கின்றனர். அப்படிப் பிரிந்து நின்று செயற்பட முடியாது." என்ற பதில் திணறடித்தது. அதன்பின் எல்லோருக்கும் எல்லாமே விளங்கிவிட்டது போலும். கேள்விகள் இல்லை.

நிகழ்வு தேசியகீதத்துடன்நிறைவு பெற்றது. இந்துக்கல்லூரித் தமிழ் மாணவிகள் சிங்களத்தில் பாடினார்கள். தாய் நாட்டின்பெருமையைப்பாடுகிறோம்என்பது அவர்களுக்கும் கூட்டத்திற்கு வந்திருந்த பலருக்கும் விளங்கவில்லை. தாய் நாட்டின் பெருமையினை தாய் மொழியில் பாடிப் பெருமைப்பட அவர்கள் விரும்பியிருப்பார்களோ தெரியவில்லை. அவர்கள் விரும்பாவிட்டாலும் தாய் மொழியில் பாடவும், தனது ஊரில் குடியேறவும் வேறு யாரேனும் விரும்பக் கூடும். அது கிடைக்காத போது தாய் மொழியில்பாடக்கூடிய, தனது ஊரில்குடியேறக்கூடிய ஒரு நாட்டை விரும்பலாம் என்று தோன்றியது.

கூட்டம் முடிந்து வெளியே வந்தபோது குலத்தார் ஒரு விதமாகச் சிரித்தார்.

"ஏனண்ணை சிரிக்கிறியள்"

"இந்தமண் மேடுபள்ளமாய், கரடுமுரடாய் கிடக்குது. இதைப்பண்படுத்தி பசுமையாக்க இவை ஒருத்தருக்கும் விருப்பம் இருக்கிற மாதிரித் தெரியேல்லை. இப்பிடியே போனால் இனியும் இந்த மண்ணிலை முட்செடிகள் முளைக்கலாம்.

**(நிகழ்காலம் தழுவிய கற்பனை)**

## facebook பக்கம்

- சுயவிமர்சனங்கள் பெரும்பாலும் "நான் அப்பாவி, எல்லாரிடமும் ஏமாறுவேன்" என்ற ரீதியிலேயே செய்யப்படுகின்றன.
- வாழ்வின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்பவர்களாய், நாலே நாலு நண்பர்கள் இருந்தாலும் போதும் என்று கற்று தந்திருக்கிறது இணையம்
- பெண்களாவது பரவாயில்லை; ஆணுக்கு அழவும் வாய்ப்பளிக்க வில்லை இச்சமூகம்!
- அம்மா செய்யும் தோசை ரவுண்டாக இல்லை என்றாலும் அந்த நிலாவை விடவும் அழகாகவே தெரிகிறது!
- காதலிக்க தெரியாததே பல காதல் முறிவுக்கு காரணமாகிறது!
- வீட்ல எதையாவது காணோம்ன்னு சொன்னாவே மனசு பதறுது! நம்மள தான பார்க்கெட் பண்ணும் !!அவ்வ்
- நீங்கள் செய்வது சரி என்று நிரூபிப்பது தவறல்ல ஆனால் அடுத்தவர்கள் செய்வதெல்லாம் தவறு என நிரூபிக்க முயல்வது தான் தவறு.
- நாலு கலியாணத்துக்கு நாம போனா தான் நம்ம கலியாணத்துக்கும் நாலு பேரு வருவாங்க பாஸ்........
- மொபைலில் கால் ஹிஸ்டரியை அழிக்க கற்றுக் கொள்கிறார்கள் என்றால் அவர்கள் கால்கள் எங்கோ தடம் மாறுகிறது என்று அர்த்தம்.
- முந்தி கடைக்குப் போனா அம்மா குடுக்குற காசுல மிச்சம் கிடைக்கும் அதை நான் அமுக்கிருவேன்! இப்போ நான் 10 ரூவா எக்ஸ்ட்ரா போட வேண்டியிருக்கு!
- வாழ்க்கையில் சிலரை புரிந்து கொள்ள ஒரு இடைவெளி தேவைப்படுகிறது. பிரிந்து செல்ல கிளைமாக்ஸ் தேவைப்படுகிறது.
- சொல்வதற்கு முன்னரே ரகசியத்தை உளற பெண்களால் மட்டும்தான் முடியும்.
- அது என்ன தூரமா போய் திரும்பி பாக்கறது. எங்கள மாதிரி டிசன்ட்டா நேருக்கு நேரு பாக்க வேண்டியது தானே பொண்ணுங்களா...??
- உங்கள் பிம்பம் உடைந்தாலும் பரவாயில்லை உண்மையாக இருங்கள் ஒரு புது பிம்பம் உருவாகட்டும் உங்கள் மீது !!
- எந்த பெண்ணாவது நீ கட்டுன வேட்டி சட்டையோட வா உன்ன நான் காப்பாத்துறேன்னு சொல்லுறாளா..ச்சே
- அப்பா கிட்ட ரொம்ப புடிச்ச விசயம், நாறிப் போன என் கார பளபளன்னு கழுவி தொடைக்கிறது, புடிக்காதது அப்போ என்னைய கழுவி ஊத்தறது..

இவ்வாரம்: https://www.facebook.com/sailajans

# தாய்நிலம்

## யூலைக் கலவரத்தின் மறுபக்கச் சான்று

வளர்மதி

கடந்த யூலை 23ம் திகதி பாராளு மன்றத்தில் இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்ட மூலத்திற்கான விவாதத்தில் கலந்துகொண்டு விவாதிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த உலக வரலாற்றினை கி.மு. கி.பி என்று வகுத்து நோக்குவது போன்று இந்நாட்டின் வரலாற்றை, 1983ற்கு முன்னர், 1983ற்குப் பின்னர் என்று பிரித்து நோக்கலாம் என்று கூறி, கறுப்பு யூலையின் 30 வருடத்தையொட்டி அன்றைய தினம் உரையாற்றியிருந்தார். உரையின் போது வழமை போன்று ஆளும் தரப்பினர் அடிக்கடி குறுக்கிட்டு, பொருத்தமற்ற விடயத்தை சுமந்திரன் அவர்கள் உரையாற்றுகின்றார் என்று குழப்பம் விளைவித்திருந்தாலும் கூட, தனது உரையை அவர் ஆற்றி முடித்திருந்தார்.

அவரது உரையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சில இப்பதிவை எழுத வேண்டுமென்று தூண்டியது. 1983ம் ஆண்டின் கலவரம் பற்றியும், தனது அநுபவத்தையம் பற்றிக் குறிப்பிடுகையில் 'அந்த நேரத்தில் நான் கொழும்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அந்த நாள் எனக்கு இப்பவும் ஞாபகமாக இருக்கின்றது. அந்த நாட்களை அநேகமாக வீதிகளிலேயே கழிக்க நேரிட்டது. கும்பல்கள் தாக்க வரும் போது அங்கும் இங்கும் ஓடியதுடன், எங்கள் வீடுகளைப் பூட்டுவதற்குக் கூட நேரமின்றி விட்டுவிட்டு ஓடினோம், அருகிலிருந்த ஒரு முஸ்லிம் சகோதரர் வீட்டிலே தங்கியிருந்தோம். அத்துடன், சிங்கள சகோதரர்கள் வீட்டில் நான்கு நாட்கள் தங்கியிருந்தோம். பின்னர் அங்கிருந்து கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டோம். அது என்னுடைய வாழ்வில் இரண்டாவது சந்தர்ப்பமாக இருந்தது. 1977லும் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக கலவரங்கள் நடைபெற்றபோதும் முதல்முதல் அவ்வாறு இடம்பெற்றது. அப்போதும் அதேபோன்று இரத்மலானை விமானநிலையத்தில் இருந்து பலாலிக்கு அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டிருந்தேன். எனது மாணவப்பராயத்திலே, இரண்டு தடவைகள் நாட்டின் தலைநகரில் இருந்து, ஒரு தடவை விமானம் மூலமும், ஒரு தடவை கப்பல் மூலமும், அரசாங்கத்தின் பூரணமான செலவில் அனுப்பப்பட்டேன். தனது தலைநகரில் என்னைப் பாதுகாக்க அரசாங்கத்தினால் முடியாமல் போனதுடன், எனது தாய்நிலம்தான் எனக்குப் பாதுகாப்பானது என்று கருதி, என்னை எனது தாய்நிலத்திற்கே அரசாங்கம் அனுப்பி வைத்தது. மக்கள் 'தாய்நிலம்' என்ற சொல்லைப் பயன்படுத்த முனையும் பொழுது, 'எவ்வாறு நீங்கள் அது உங்கள் தாய்நிலம் என்று சொல்ல முடியும்' என்று பிரச்சினை எழுப்பப்படுகின்றது. ஆனால் எனக்கோ, பல்லினத்தவர்களும் சேர்ந்து வாழும் இந்த நாட்டின் தலைநகரில், இது உனது நிலம் அல்ல வடக்குத்தான் உனது நகரம் என்றும், உனது தாய்நிலத்தில்தான் பாதுகாப்பாக இருக்க முடியும் என்றும் கூறி, இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கம் இதனை வெளிப்படுத்தியிருந்தது. இதனை நான் கூறவில்லை, மாறாக, இலங்கை அரசாங்கம்தான் என்னை அனுப்பி வைத்தது. அதேபோன்றுதான் அப் போது கிழக்குக்கும் பலர் அனுப்பி வைக்கப்பட்டார்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். இத்தகையதொரு விடயத்தைப் பாராளுமன்றில் பதிவு செய்தமைக்கு பா.உ. சுமந்திரனுக்குப் பாராட்டுக்கள்.

உண்மையில், வடக்கும், கிழக்கும் எமது தாய்நிலம் என்பதற்கு அரசாங் கமே தனது நடவடிக்கையால் எடுத்துக்கூறியிருந்தமைக்கு இவை சான்றாதாரங்களாக உள்ளன. இதேபோன்று, யூன் 7, 2007ல் சார்க் மாநாட்டிற்கான பாதுகாப்புக் கருதி கொழும்பில் தங்கியிருந்த தமிழர்கள் இரவோடிரவாக பேருந்துகளில் ஏற்றப்பட்டு வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு மனிதாபிமானமற்ற முறையில் வெளியேற்றப்பட்டபொழுதும், இதே செய்தியை அரசாங்கம் சொல்லாமல் சொல்லியிருந்தது.

யூலைக் கலவரம் நடந்து, ஆண்டுகள் 30 நிறைவடைந்த போதிலும், அதன் மூலம் நிறுவப்பட்ட செய்திகள், வெளிக்கொண்டுவரப்பட்ட உள் ளார்ந்த உணர்வுகள், சுதந்திரம் நோக்கிய சிந்தனைத் தூண்டல்கள் எவையும் இன்னமும் மாறவில்லை; மறக்கப்படவில்லை. 'வடக்கு-கிழக்குத் தான் தமிழர்களின் தாய்நிலம்' என்று இலங்கை அரசாங்கமே வரலாற்றில் கூறியிருக்கின்றமைக்கு யூலைக் கலவரம் நமக்கொரு சான்றாதாரம்.



# காலக் கனதியை புரிந்து கொள்ளவேண்டும்

**பல்லவன்**

சிங்கள அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழர்கள் மிகத்தீவிரமாகக் கிளர்ந்தெழுந்த பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அக் கிளர்ச்சிகளின் வடிவமாகவும் ஆரம்பநிலைக்களனாகவும் இருந்திருக்கின்றது. தமிழ்த்தேசியப் போராட்டம் சார்ந்து பல்வேறு மாற்றுக்கருத்துக்கள் கொள்கைகள் செயற்பாடுகள் அனைத்தும் குவிந்திருந்த மையமாகவும் பல்கலைக்கழகம் என்றுமே இருந்து வருகின்றது என்பதிலும் மாற்றுக்கருத்துக் கிடையாது.

விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இன்றுவரை நம்பப்படும் பேராசிரியை ராஜினி திரணகம, பெரும்பாலான சந்தர்பங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம், விடுதலைப்புலிகளுக்கு எதிரானகருத்தியல்நிலைப்பாட்டைக் கொண்டிருந்து படுகொலை செய்யப்பட்டும் காணாமலும் போன விஜிதரன் மற்றும் செல்வி உள்ளிட்ட மாணவ செயற்பாட்டாளர்கள் என்ற ஒரு பகுதியினரையும்,

மண்சுமந்தமேனியர் நாடகம் மூலம் விடுதலை உணர்வூட்டிய அரங்கச் செயற்பாட்டாளர்கள் பின்னர்

> **இவ்வாறானவரலாற்றுவிடயங்களைக்கொண்டபல்கலைக்கழகம் தன்னை முழுமையான விடுதலைப் பக்குவத்துக்குள் கொண்டுசென்றிருக்கின்றதா என்பது இன்றுமட்டுமன்றி என்றுமே சிந்திக்கப்பட வேண்டிய விடயம். வெறுமனே உணர்ச்சி அடிமைகளாகவும் உணர்வுப் பிரதிபலிப்புக்களாகவும் தான் பல்கலைக்கழகம் இருக்கப்போகின்றதா என்ற வினா மிக முக்கியமானது.**

அவர்களின் காலநீட்சியின் வெளிப்பாடாக அமைந்த அரங்க விடுதலைவடிவத்தின் முனைப்பு பெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் பங்குதாரர்கள் என்ற இன்னொரு பகுதியினரையும்,

அதேபோன்று ஆயுதப் போராட்டத்தில் தம்மை நேரடியாக ஈடுபடுத்திக்கொண்ட திலீபன், புலித்தேவன், குமரன்பத்மநாதன் போன்ற முக்கியமான உலகளவில் அறியப்பட்ட போராளிகளும் அவர்களைப் பின்தொடர்ந்த பல பதிவுசெய்யப்பட்ட புலிப்போராளிகளும் என பிறிதொரு பகுதியினரையும்,

விடுதலைப்புலிகள் தம்மை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக நிலைநிறுத்திய பின்னர் அவர்களை பின்பற்றிய மாணவ சமூகம் என இன்னொரு பகுதியினராக பல வகையானவர்களை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சார்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தளத்தில் அடையாளப்படுத்த முடியும்.

இந்த அடையாளப்படுத்தல்களின் பின்னணியில் இருந்து நோக்கும் போது தமிழ்மக்களின் உண்மையான உணர்வுகளை நாடிபிடித்துப்பார்க்கும் இடமாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் உலகத்தின் பார்வையில் தன்னை வைத்துக்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியம் சார்ந்து உணர்ச்சிமயப்பட்டு பேசும் பலரும் கருதிக்கொள்வது ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயமே. ஆனால் அந்த நாடித்துடிப்பை வைத்து தமிழர்களின் வருத்தத்தை உலகம் முழுமையாக கற்றுக்கொள்ளத் தக்கவிதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னை தகவமைத்துக்கொண்டுள்ளதா என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமே. இந்தக் கருத்து நிலைப்பாட்டைச் சிந்திக்க விளையும்போது நாம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலை உணர்வுகளை மலினப்படுத்துவதாக யாராவது கருத்து எடுப்பார்களாக இருந்தால் அவர்களைப் போல சிறுபிள்ளைத்தனமான மனிதர்கள் இருக்க முடியாது என்பதுடன் அத்தகைய சிந்தனைக்கு நம்மை தயார்ப்படுத்தாவிடில் நாமே நமது இன விடுதலையைத் தள்ளிப்போட விருப்பப்படுவதாகவும் அமைந்து விடும்.

தமிழ்மக்களின் கல்விக்கு தனித்துவமான பாதையை தகவமைக்கும் நோக்கில் பகீரதப் பிரயத்தனங்களின் மத்தியில் 1970 களின் ஆரம்பப் பகுதியில் வளாகமாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்ட யாழ்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியோடு சமாந்தரமாக தமிழர்களின் இனவிடுதலைப் போராட்டமும் வளர்ந்து வந்திருக்கின்றது. இனவிடுதலைப் போராட்டத்தின் உச்ச கட்டமான ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட தருணங்களில் பல்வேறு விடுதலை அமைப்புக்களினதும் ஆலோசனை மையமாகவும் கருத்தாடல் களமாகவும் பல்கலைக்கழகம் இருந்திருக்கின்றது. பின்நாளில் ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களைப் பின்தள்ளி விடுதலைப்புலிகள் முனைப்புப் பெற்ற போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களும் அவர்களுக்கு சார்பானதாக தன்னை மாற்றிக்கொண்டது.

விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை வலுப்படுத்தும் முக்கிய அமைப்பினராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் திகழ்ந்தனர். அதற்காக அவர்கள் பொங்குதமிழ் நிகழ்வை ஆரம்பித்து அதனூடக மிகப்பெரும் சமூகஅணிதிரட்டலை செய்து மக்களின் மொழியாக ஏகப்பிரதிநிதித்துவ முடிவை மொழிந்தனர். பொங்குதமிழ் நிகழ்வின் முக்கிய செயற்பாட்டாளரும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளருமாகவும் இருந்த விஞ்ஞான பீட மாணவர் திவ்வியன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் காலத்தின் அவசிய அவசரத் தேவைகருதி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அவர்களும் ஏகப்பிரதிநிதித்துவம் என்ற மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர்களாக நாடாளுமன்றத் தேர்தலை 2004 இல் சந்தித்த போது பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டமைப்பினருக்காக தீவிரமான பிரச்சாரங்களை முன்னெடுத்ததுடன் அத் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் கஜேந்திரன் அதிகப்படியான விருப்பு வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கையில் அம் முறைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுக்கொண்டார். ஏனைய இருவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் மற்றும் அப்போதைய ஜே.வி.பி பிரச்சார செயலர் விமல் வீரவன்ச.

இந்தத் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதிக செல்வாக்கு செலுத்தியதுடன் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக அப்போதைய மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன் கொக்குவிலில் ஈ.பி.டி.பியினரின் தாக்குதலுக்கு உள்ளாகியமையும் பதிவுக்குரிய விடயமாகும்.

இவ்வாறான வரலாற்று விடயங்களைக் கொண்ட

> **பல்கலைக்கழகம் இன்னும் தன்னை சமூகமயப்படுத்த வேண்டியுள்ளதுடன் ஆற்றல் திறன்மிகு எதிர்கால சந்ததியை அடைகாக்கும் பொரிகலனாக தன்னை மாற்ற வேண்டும்.**

பல்கலைக்கழகம் தன்னை முழுமையான விடுதலைப் பக்குவத்துக்குள் கொண்டுசென்றிருக்கின்றதா என்பது இன்றுமட்டுமன்றி என்றுமே சிந்திக்கப்பட வேண்டிய விடயம். வெறுமனே உணர்ச்சி அடிமைகளாகவும் உணர்வுப் பிரதிபலிப்புக்களாகவும் தான் பல்கலைக்கழகம் இருக்கப்போகின்றதா என்ற வினா மிக முக்கியமானது. இந்த வினா எழுப்பப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. பின்வருவனவற்றை முக்கியமானதாக பட்டியல் இட முடியும்.

- முப்பது வருட பல்கலைக்கழக வரலாற்றில் தனித்துவம்மிக்க தமிழ் தலைவர்களை தமிழர்களின் அரசியலுக்காக பிரசவிக்க பல்கலைக்கழகம் தவறி இருக்கின்றது.
- சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக தென்னிலங்கை பல்கலைக்கழகம் சார்ந்த பேராசிரியர்கள் நாடாளுமன்றம் உள்ளிட்ட உயர் சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வேளையில் எமது பல்கலைக்கழகம் அத்தகு நியாயமான, நிலையான தகுதி கொண்ட கல்வியியலாளர்களை தரத் தவறியிருக்கின்றது.
- வேலையற்ற பட்டதாரிகளை மட்டுமே உருவாக்க முடிவதுடன் ஐக்கிய நாடுகள் சபை போன்ற உயர்மட்ட சர்வதேச அமைப்புக்களிலும் பதவிகளை வகிக்கத்தக்க திறன்மிக்க பட்டதாரிகளை உருவாக்க தவறிவருகின்றது
- மாணவர்கள் இனப்பிரச்சனை தொடர்பில் எழுந்தமான அறிவைக் கொண்டவர்களாக இருப்பதுடன் தமது அரசியல் பாதையை முன்னோக்கி நகர்த்த தேவையான அரசியல் மற்றும் ஆங்கில அறிவினைக் கொண்டவர்களாக தம்மைப் புடம் போடுவதற்குத் தவறி விடுகின்றார்கள்.
- ஆய்வு அரங்கங்களில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பிலான முக்கியப்படுத்தல்கள் குறைந்து வருகின்றன. உதாரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் போருக்கு பின்னான அபிவிருத்தி என்ற தலைப்பில் பல்கலைக்கழகம் நடாத்திய சர்வதேச ஆய்வுமாநாடு உள்ளடக்கிய விடயங்கள் பல தலைப்பிலிருந்து மிகவும் விலகியிருந்தமை பலரும் அவதானித்த விடயமானது.
- பத்திரிகைகளில் விஞ்ஞானபூர்வமான அரசியல் சார் படைப்புக்களை சாதாரண மக்களுக்கு தரும் கல்வியலாளர்களின் செறிவும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மிகக் குறைவாகவேயுள்ளது.
- சர்வதேச உறவுகள், சமாதானக் கற்கைகள் போன்ற சமூகவிழிப்புக்கான பட்டங்களை வழங்கவேண்டிய தனது கடமையை பல்கலைக்கழகம் தவற விட முடியாது.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழர் நலன்தொடர்பில் சிந்திக்க வேண்டிய பக்கங்கள் பல இன்னும் மீதமாக இருக்கின்றன. இவை தொடர்பில் அக்கறை எடுக்காது



வெறுமனே பருவகால கொந்தளிப்புக்களை மட்டும் உமிழ்ந்து விடுவது நீண்டகால நோக்கில் வாய்ப்பாக அமையாது. பல்கலைக்கழகம் இன்னும் தன்னை சமூகமயப்படுத்த வேண்டியுள்ளதுடன் ஆற்றல் திறன்மிகு எதிர்கால சந்ததியை அடைகாக்கும் பொரிகலனாகத் தன்னை மாற்ற வேண்டும். மாணவர்களும் தம்மை சுயஆளுமை மிக்கவர்களாகவும் எத்தகைய வடிவத்திலும் இனத்துக்கு விடுக்கப்படும் எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளத்தக்கவர்களாகவும் தம்மை வளப்படுத்திக் கொள்வதுடன் உண்மையான விடுதலை விரும்பி எதிரியை ஒருபோதும் சீண்டுவதில்லை என்பதையும் உள்ளார்த்தமாக உணர்ந்து கொள்ளவேண்டும். அவலப்பட்ட எம் சமூகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடம் தன்னை அடகு வைத்துவிட்டு அதிக எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கின்றது. காலக்கனதியை பல்கலைக்கழகம் புரிந்து கொள்ள வேண்டும்.

போர் விதைத்துவிட்ட

# பண்பாட்டுச் சவால்கள்

**- அ. அஜந்தன்**

கடந்த காலங்கள் தந்த அனுபவங்களை மறக்கமுடியாததும் அதன் தாக்கங்களை இன்றும் அனுபவிக்கும் சமூகமாகவுமே நாம் வாழ்ந்து வருகின்றோம். போர் எமக்கு ஏற்படுத்திய நேரடியான தாக்கங்களான உயிரிழப்பு, காணாமல் போதல், காயங்கள், அவயவ இழப்புக்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் என்பன இன்றும் நம்முள் விதவைகள், அனாதைச் சிறுவர்கள், வலுவிழந்தோர், தற்கொலைகள், பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கைகளை அதிகரித்துக்கொண்டுதான் செல்கின்றது. எத்தனை அபிவிருத்தித் திட்டங்கள் வந்துபோனபொழுதும் விதவை, அனாதை, வலுவிழந்தோர் என்ற பட்டங்களும் அதனால் ஏற்பட்ட உள தாக்கங்களும் இன்னமும் இனங்காணப்பட்டே வருகின்றது. இவர்களின் பொருளாதாரம் வாழ்வாதாரம் கல்வி என்ற பரப்புக்கு அப்பால் அவர்கள் இழந்த அன்பும் பாதுகாப்பும் உரிமைகளும் யாராலும் ஈடுசெய்ய முடியாததாகவே உள்ளது. போருக்கு பிற்பட்ட எமது சமூகத்தில் இன்னமும் இவர்களே நலிவுற்றவர்களாக உள்ளனர். உதவித்திட்டங்களில் முன்னுரிமை கொடுக்கப்படுவதுபோல் துஷ்பிரயோகங்களிலும் சமூக புறக்கணிப்புகளிலும் இவர்களே முதலில் பாதிக்கப்படுகின்றனர்.

இடப்பெயர்வும் இழப்புக்களும் எமது இருப்புக்களை மட்டுமின்றி எமது பாரம்பரிய, ஆன்மீக, கலாசாரப் பண்புகளையும் மறக்கச்செய்துள்ளது. சொந்த வீட்டில் சொந்த மண்ணில் பேணிவந்த ஆன்மீக, மரபுவழி விழுமியங்களை இடைத்தங்கல் முகாம்களில் அல்லது உறவினர்களின் வீடுகளில் கடைப்பிடிக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை உருவாகி விடுவதால் பரம்பரை பரம்பரையாக கட்டிக்காத்துவந்த பாரம்பரியங்கள் படிப்படியாக மறக்கப்பட்டுவந்தது. குறிப்பாக ஒரு மரணச்சடங்கில் செய்யப்படவேண்டிய சில ஆன்மீகச் சடங்குகள் இறந்துபோன ஆத்மாவை சாந்திப்படுத்தும் என்பது எல்லா மதங்களின் நம்பிக்கையாக இருந்துவந்தது. ஆனால் போர்ச் சூழலில் அவற்றை செய்யமுடியாமல் போனதும் அதுவே அவர்களுக்கு உளவியல் தாக்கமாக மாறியதையும் நாம் அறிந்துள்ளோம் பின்பு படிப்படியாக அவை மறக்கப்பட்டு அவர்களின் இயல்பு வாழ்வுக்கு திரும்பியபோதும் இந்த வழக்கங்கள் எதிர்காலத்தில் எந்த அளவிற்கு முக்கியம்பெறும் என்பது கேள்வியாகவே உள்ளது.

தமிழர் வரலாற்றில் குடும்ப வாழ்வு என்பது ஒரு கட்டுப்பாடுடைய கன்னியமான உறவுமுறையைக் கொண்ட சமூகத்தின் ஒரு அடிப்படைக் கூறாக இருந்தது. அந்தக் குடும்பத்தின் அங்கத்தவர்கள் பொறுப்புடனும், பண்புடனும், கற்புடனும் வாழும் சிறப்பு தமிழர் சமூகத்தில் மட்டுமே இருந்துவந்தது. இடப்பெயர்வும் இழப்புக்களும் மறுமணம், பிரிந்து வாழ்தல் அல்லது சட்டவிரோதமாக சேர்ந்து வாழ்தல் போன்றவற்றால் குடும்பச் சூழலையும் குடும்பத்தில் தங்கி வாழும் பிள்ளைகளின் வாழ்வையும் சீர்குலைத்துள்ளது.

இடப்பெயர்வு பல மனப்பெயர்வுகளுக்கும் காரணமாகவே உள்ளது. மிகக் குறுகிய குடில்களாலான தற்காலிக வீடுகள் பாதுகாப்பற்ற ஒழுக்கமற்ற தாம்பத்திய வாழ்வையே கொடுக்கிறது. இது பல சமூக நடத்தை பிறள்வுகளை ஏற்படத்தியதை யாரும் மறுக்க முடியாது.

நாங்கள் என்ற பலம் இழந்து "நான்", "எனக்கு" என்ற சுயநலப்போக்கும் நமக்குள் வளர்ந்துவிட்டது. உயிராபத்து வரும் வேளைகளில் என்னையும் என்னைச் சார்ந்த குடும்பத்தையும் காப்பாற்றுவதைத் தவிர மற்றவர்களுக்கு அந்தச் சமயத்தில் உதவாமல் போவது தவறு என்று வாதாட முடியாத சூழ்நிலை உள்ளது. புறாவிற்குப் பதிலாக தன்னையே உணவாக கொடுக்கத் துணிந்த சிபி மன்னனின் கதை படித்துவந்த நம்மவர்கள் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மற்றவர்களின் உரிமைகளையோ உணர்வுகளையோ தேவைப்பட்டால் உயிரையோகூட பறிப்பதற்கு துணிந்திட்ட நிலை காணப்படுகிறது. உயிருக்குப் போராடி வீதியில் கிடப்பவரையும் அரசியல் பின்புலத்தின் பயத்தில் உதவாமல் ஒதுங்கிப்போனபொழுது நாம் மனிதர்கள் என்பதையே ஒருகணம் மறந்திருந்தோம்.

பெரியோரைக்கனம்பண்ணல், பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்தல், மூத்தவர்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் இடம் கொடுத்தல் என்ற பண்பாட்டைப் படித்து வாழ்ந்துவந்த நாம் பின்பு பட்டினி போக்க சங்கக் கடைகளிலும், ஒரு நபருக்கு அரைவாசி வேகிய ஒரு இறாத்தல் பாண் வழங்கிய வெதுப்பகங்களிலும், பெற்றோல் நிரப்பு நிலையத்திலும் முண்டியடித்து நின்றபொழுது பால், வயது வேறுபாடின்றி சண்டைபிடித்து வரிசைகளில் எமது இடங்களை தக்கவைத்தோம். ஆங்கே மதகுரு நின்றாலும்சரி கற்பிணிப் பெண்கள் நின்றாலும்சரி சற்றும் இடம்கொடுக்க மனமின்றி முகம் திருப்பும் மனப்பாங்கையே கொண்டிருந்தோம். விருந்தோம்பலிற்கு பேர்போன மண்ணில் பட்டினி தலைதூக்க விருந்தாளிகளும் எதிராளிகளான துர்ப்பாக்கிய நிலை நிலவியதை மறுக்கமுடியாது.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த வேளைகளிலும் யாரென்று தெரியாதவருக்கும் "லிப்ற்' கொடுத்து உதவிய நாம் பின்பு மோட்டார் சைக்கிளில் செல்லும் போதும் லிப்ற் கேட்டவர் யாரோ தெரியவில்லை, எங்கிருந்து வந்தவரோ தெரியவில்லை, எங்கே போகின்றார்? , ஏன் போகின்றார் ? இப்படியான பல கேள்விகள் எங்கள் மனதில் உதிக்க ஆரம்பித்தபின் வீதியில் யாரும் லிப்ற் கேட்டாலும் எதையுமே கண்டுகொள்ளாமல் சென்றுவிடுவோம். இவையெல்லாம் போர் எமக்குள் விதைத்துவிட்ட பண்பாட்டுச் சவால்கள். நிலைமை ஓரளவு சீராக வந்த போதிலும் நாம் மீள்குடியேற்றப்பட்ட போதிலும் எமது மனங்கள் ஏனோ பழைய அந்த வடுக்களுக்குள்ளும் பழக்கத்திற்குள்ளுமே நின்று விடுகிறது.

---

5ஆம் பக்கம் தொடர்ச்சி

மன்றத்தில் நடைபெற்ற தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவில் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழிக்கான சம உரிமை வழங்கப்பட எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில் 1956இல் தனிச் சிங்களம் கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டபோது தமிழ் பேசும் மக்களுக்கு சில வேண்டுகோள்களை தமது சொற்பொழிவில் முன்வைத்தார்.

இறைவனை வழிபடுவதுடன் தமிழ் உரிமைகளை பெறுவதற்கு சுயநலம் களைந்து ஒவ்வொரு தமிழரும் சிந்தித்து பாடுபடவேண்டும்

உரிமைகளைப் பெற அரசியல் வாதிகளோடு ஒத்துழைக்கவேண்டும்

தனிச் சிங்களச் சட்டம் தமிழ் மக்களைப் பாதிக்கும் கொடுங்கோண்மை ச்சட்டம் என்பதை நீதி மன்றங்களில் விவாதிக்க வழிவகை மேற் கொள்வதோடு இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்

உரிமை இழப்புபற்றி ஐக்கிய நாடுகள் சபையில் முறையிடவேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் தமிழைக் கையாள வேண்டும்.

நம் அறப்போரின் நோக்கங்களை சிங்கள் மக்கள் அறிந்துகொள்ள சிங்கள் மொழியிலும் எழுதி பரப்புரை செய்யவேண்டும்.

மறைமுகமான சிங்களக் கட்டாயப் படுத்தல்களை விழிப்பாயிருந்து எதிர்க்கவேண்டும்

தமிழ் மக்களின் உணர்ச்சியின்மையை நீக்கி தமிழ் மொழியுரிமை மட்டில் அவதானத்துடன் விழிப்பாயிருந்து செயற்பட வேண்டும்.

தமிழ் அரியாசனத்திலிருந்து தூக்கி வீசப்படுவது உறுதியாகிக் கொண்டிருந்தது தனது பரந்த அறிவைப் பயன் படுத்தி சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக இருப்பதால் சிங்களத்துக்கு எந்த ஆபத்தும் வராது என்றும் சிங்களம் அரசாளும் மொழியாக இருந்தாலும் தமிழையும் சிங்களத்தின் நிலையை பாதிக்காமல் பயன் படுத்தலாம் என்றும் பல நாட்டு அரசியல் சாசனங்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகளில் கட்டுரை எழுதினார் தனிநாயகம் அடிகள் மேற்படி கருத்துக்களை தொகுத்து தமிழ் மொழி உரிமைகள் எனும் நூலாக தனிநாயகம் அடிகள் வெளியிட்டார்.

காலி முகத்திடலில் நடைபெற்ற சத்தியாக் கிரகத்தில் கலந்துகொண்டு தன் எதிர்ப்பைக் காட்டினார்.

தனிநாயகம் அடிகள் தமிழ்ப்பண்பாடு என்ற சஞ்சிகையில் பிரதம ஆசிரியராக 12 தொகுதிகளை அருமையான ஆங்கில நடையில் தமிழ்நாட்டு வெளி நாட்டு அறிஞுர்களை கொண்டு தரமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதவைத்தார். ஒவ்வொரு தமிழனும் தனிநாயகம் அடிகளாராக மாறவேண்டும் அவர் சிந்தனைகளை சிரமேற்க வேண்டும் அதுதான் தனிநாயகம் அடிகளாரிற்கு நாம் செய்யும் நூற்றாண்டுக் கடனாகும்.

---

# நாட்டார் பாடல்களும் பெண்களும்



**-கீதாகணேஷ்**

மக்கள் குழுமத்தின் வாழ்க்கைக் கோலங்களை உள்ளவாறு வெளிக்கொணர்கின்ற இலக்கியங்களுள் நாட்டார் பாடல்கள் கலப்படம் எதுவுமற்ற தூய்மையான பாடல்களாக உள்ளதை உள்ளவாறே கூறுகின்றனவாக விளங்குகின்றன. குறிப்பாக, கள்ளமற்ற கிராமிய மக்களின் உள்ளத்தைப் போன்றே அவர்களின் பாடல்களும் தூய்மையானவை. இன்பமூட்டுபவை. கலைநயம் மிகுந்தவை. தொன்மைத் தமிழின் இலக்கியங்கள் யாவும் ஏட்டுவழி பேணப்பட்டு அச்சுவாகனம் ஏற, ஏடெடுத்து அறியாத பாமரப் பெண்களே அச்சுவாகனத்திடம் ஒப்படைக்கும் வரை நாட்டார் பாடல்களுக்கு உயிர்கொடுத்து வந்தனர்.

இலக்கியம் என்பதற்குரிய வரையறையோ, இலக்கண விதிகளையோ அறிந்திராத நாட்டுப்புற பாமரப் பெண்கள் சிறந்த சொல் நயம்மிகுந்த, சந்தச் செறிவு மிக்க பாடல்களைப் பாடியிருப்பது கற்றறிந்த புலமையாளர்களையும் வியக்கவைக்காமலில்லை. ஏன்? சங்க இலக்கியம் முதல் இன்றைய படைப்பாக்கங்கள் வரை உயிர்த்துடிப்பான இலக்கியங்களின் பிரசவத்திற்கும் இவர்களே தாயாக விளங்குகின்றனர்.

தன் கணவனுக்குரிய கடமையைச் செவ்வனே செய்வதும் குழந்தையைப் பெற்று வளர்ப்பதுமே கடமையாகக் கொண்ட பெண்ணானவள் குழந்தை தூங்கும் பொருட்டு தேமதுரத் தமிழ்ச் சொற்களால் தூங்க வைக்கிறாள். நீலாம்பரி ராகத்தில்

"ஆண்பனையின் நுங்கே அணில் கோதா மாம்பழமே"என தன் குழந்தையை அரிதான பொருளுக்கு ஒப்பிட்டுப் பாடுவதென்பது பாமரப் பெண்களின் இயற்கையான புத்தி சாதுரியத்தையே வெளிப்படையாகக் காட்டிற்று. தாயின் தாலாட்டில் தன்னை மறந்து தூங்கும் குழந்தை, முதலில் கேட்கும் இசையே இந்த நாட்டார் பாடல்தான். தாலாட்டில் குழந்தை தூங்கினாலும் சுற்றியிருப்போரும் அவள் இசை மயமான தாலாட்டை ரசிக்கின்றனர்.

ஆண்கள் தலைமையேற்றுச் செய்கின்ற தொழில்களில் கூட பெண்களே தொழிற்பாடல்களை அதிகம் பாடுவதை அவதானிக்க முடிகிறது. வேளாண்மைப்பாடல் மலையகத் தொழிற்பாடல்களாக இருந்தாலும் சரி பெண்களே இசைநயத்துடன் பாடுகின்றனர். தொழிற்பாடல்கள் வேலையின் களைப்பினைப் போக்குவதற்கு கூட்டாகப் பாடப் பட்டாலும் தொழிலில் அனுபவிக்கும் இன்னல்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் மேல் வர்க்கத்தினரின் அதிகாரங்களையும் மிக இலாவகமாக வெளிக்கொணர்வர்.

"பழமும் எடுக்கவில்லே
பழைய சோறும் திங்கவில்லே
வீட்டுக்குப் போகவில்லே
வேகுதையா என் மனசு." என்ற பாடல் குழந்தைகளை உறவுகளிடமோ லயங்களிலோ ஒப்படைத்து விட்டு தோட்டத்தில் வெந்து மடியும் பெண்களின் நிலையை வெளிக்கொணர்கிறது. இவ்வாறு தம் சொந்த அனுபவத்தினூடாக நிறைவான படைப்பை பிரசவிக்கின்ற ஆக்கத்திறன் 'ஒன்றும் படித்தறியாதவர்கள்' எனக் கூறப்படும் லயத்துப் பெண்களிடம் நிறையவே இருக்கின்றன.

மரணச் சடங்கில் பாடப்படுவதான ஒப்பாரிப் பாடலும் தாலாட்டைப் போன்றே பெண்களுக்கு மட்டும் உரியனவாய் விளங்குகின்றன. இறந்தவரின் சிறப்புகள் நற்குணங்கள் அவரின் சேவைகளைப் பலவாறும் புகழ்ந்தும் பிரிவின் ஆற்றாமையையும் ஒப்பாரியாகப் பாடுவர். இவ்வாறு தம் மன அழுத்தங்களை பலருடனும் இணைந்து பாடுவதன் மூலம் அவர்களின் மனச்சுமைகள் இறக்கி வைக்கப்படுகின்றன.

"தங்கங் கசந்ததென்ன-நீங்க
தனிப்பட்டுச் சென்றதென்ன"
"கரயிடிஞ்சு மரஞ்சாஞ்சு-எனக்கு
கவலவெச்சு கண்ணசந்தே" என்று பாடல்களை எழுந்தமானகப்பாடும் போது கூட சொல்லடுக்கு, ஓசைநயம் என்பன இயல்பாகவே இவர்களிடத்துக் கலந்துள்ளமையை எடுத்தியம்புகிறது.


நாட்டார்பாடல்கள் இன்று புதிதாகத் தோற்றம் பெறுவது அரிதாகவே இருந்தாலும் ஏற்கெனவே பாடப்பட்டவை அச்சுவாகனமாகப் பேணப்படுகின்றன. ஏட்டினைப் பெண்கள் தொடுவதும் தீமையென்றெண்ணியிரந்தவர்களின் காலத்திலேயே தோன்றி வாய்வழியூடுகடத்தி நாட்டார் பாடல்களைப் பேணிய பெருமைக்குரியவர்கள் மாதர்களே.


# எட்வர்ட் ஸ்நோடென்
## மனச்சாட்சியின் குமுறல்



"இது மாதிரியான (கீழ்தரமான) காரியங்களில் ஈடுபடும் ஒரு சமூகத்தில் நான் வாழ விரும்பவில்லை. நான் செய்யும் எல்லா காரியங்களையும் (ரகசியமாக) பதிவு செய்யும் ஒரு உலகில் நான் வாழ விரும்பவில்லை." ஸ்நோடெனின் இந்த அறிவிப்பு ஹாங்காங்கில் இருந்து வெளிவந்த நேரம் இது இத்தனை பெரிய அம்பலமாக இருக்கக்கூடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த அம்பலத்தின் ஆழத்தை அறிந்தவர்கள் அனைவரும் மௌனமாகவோ அல்லது தங்களின் கட்டுப்பாட்டையே இழந்தோ பிதற்றிக் கொண்டிருந் தார்கள்."

29 வயதுடைய ஸ்நோடென் அமெரிக்காவின் உளவுத் துறையான சி.ஐ.ஏ யின் முன்னாள் ஊழியர், அதன் பின் அவர் அமெரிக்காவின் உளவுத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் ஒப்பந்தக்காரரான பூஸ் ஆலென் ஹாமில்டனில் பணியாற்றிவந்தார். உலகம் முழுதும் நடக்கும் வலைத்தளம் சார்ந்த பரிவர்த்தனைகளை உளவு பார்ப்பதுதான் இந்த நிறுவனத்தின் அடிப்படை வேலை. இணையத்தில் தான் இன்றைய உலக நாடுகள், பெரும் நிறுவனங்களின் எல்லா தகவல் தொடர்புகளும் நடைபெறுகின்றன. அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகள் எவ்வாறு கூட்டாக உலகத்தையே வேவு பார்க்கும் செயலில் ஈடுபட்டுள்ளன என்பதை மிக துல்லியமாக வெளி உலகிற்கு அம்பலப்படுத்தினார் ஸ்நோடென்.





நிச்சயம் இந்த அம்பலத்தை அவர் அமெரிக்க மண்ணில் செய்திட இயலாது. ஆகையால் அவர் கொஞ்சம் பேச்சு சுதந்திரம் இருப்பதாகக் கருதப்படும் ஹாங்காங்கைத் தேர்வு செய்தார். முதலில் ஸ்நோடென் இந்த ஆண்டு ஜூன் - ஜூலை மாதம் 'தி கார்டியன்' பத்திரிகையில் பல பேட்டிகளை தொடராக வழங்கினார். எவ்வாறு மொத்த ஐரோப்பாவின் தொலைபேசிகளும் ஒட்டு கேட்கப்படுகிறது, உலகம் முழுவதும் உள்ள இணையதளங்கள் எவ்வாறு கண்காணிக்கப்படுகின்றன என்பதையும் அதன் வழிமுறை அட்டவணைகளுடன் விளக்கினார். அமெரிக்க வரலாற்றிலேயே மிகப் பெரும் அம்பலமாக இது கருதப்படுகிறது. ஒருபுறம் அமெரிக்க அரசு ஸ்நோடெனை அரசுத் தகவல்களைத் திருடியவன், காட்டிக் கொடுத்தவன், சீன உளவாளி என்று வர்ணித்தாலும், மறுபுறம் உலகம் முழுவதிலும் உள்ள சிவில் சமூக இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் ஸ்நோடெனை ஒரு கதாநாயகனாகவே பார்க்கின்றன.

அமெரிக்காவில் உதாஹ் பகுதியில், அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஏஜன்சி 2 பில்லியனில் ஒரு பெரும் வளாகம் கட்டி வருகிறது. அதில் எல்லா தகவல்களையும் சேமித்து வைக்கும் வசதியுள்ளது. ஒவ்வொருவருக்கும் 10 லட்சம் டி.வி.க்கள் அளவுக்கு அவர்களது சேமிப்பு கலன் உருவாக்கப்பட்டுள்ளது.

அடுத்த நூறு ஆண்டுகளுக்கு இந்த சேமிப்புக் கலன்கள் போதுமானவை. எதிர்வரும் ஒக்டோபரில் கட்டுமானங்கள் பூர்த்தியாவதுடன், 100 தொடக்கம் 200 பேர்வரை பணியில் அமர்த்தப்படவுள்ளனர். அவர்கள் அத்தனைபேரும் அமெரிக்கப்பிரஜைகளாகவே இருப்பர். இந்தத்திட்டங்கள் அனைத்தும் இரகசியமாகவே செயற்படுத்தப்படுகின்றன.

அது தவிர, அமெரிக்காவின் உளவுத்துறையினர் தனிநபர்களின்தகவல்களைமட்டும்தான் இந்த நிறுவனங்கள்உளவு பார்த்தனவா என்றால் இல்லை, தனிமனிதர்கள் தொடங்கி உலகின் எல்லா நாட்டு அரசுகளின் செயல்பாடுகளையும் வேவு பார்த்துள்ளன. 2009ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஜி20 நாடுகளின் கூட்டத்தின்போது, இந்த 20 நாடுகளின் பிரதமர்கள், அமைச்சர்கள், ராஜாங்க அதிகாரிகள் தொடங்கி மொத்தம் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் அங்கே செல்லும் அனைவரின் நடவடிக்கைகளையும் வேவு பார்த்திருக்கின்றன என்று ஸ்நோடென் தெரிவிக்கிறார். இந்த அதிகாரிகளுக்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இணைய வசதிகள் அனைத்திலும் உளவுக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்த நாடுகளின் பிரதமர்கள் தங்களது நட்பு நாடுகளின் பிரதமர்களுடன் என்ன பேசிக் கொண்டார்கள், அந்த நாடுகளிடையே நடைபெற்ற வெளிப்படையான மற்றும் ரகசிய உடன்படிக்கைகள் என்ன என்பவை முதல் சகலமும் அமெரிக்காவின் உளவுக் கருவிகளைக் கடந்துதான் சென்றிருக்கின்றன.

இந்த மாநாட்டில் மட்டும் அவ்வாறான வடிவமைப்பு இல்லை. மாறாக, உலகம் முழுவதுமுள்ள இணையத்தள சேவைகள் அமெரிக்கா வழியாக செல்லும் வகையில்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரும் ஒளியிழை தொடர்புக் கயிறு அமெரிக்காவில் தான் உள்ளது. இந்த ஒளியிழை தொடர்புகளை நடத்தும் எல்லா நிறுவனங்களும் அமெரிக்க அரசிற்கு இந்த வழியாகச் செல்லும் எல்லா போக்குவரத்துகளையும் கண்காணிக்கும் உரிமையை வழங்கியுள்ளன. அமெரிக்க உளவுத் துறை தனது வடிகட்டிகளை இந்த நிறுவனங்களின் அலுவலகங்களில் நிறுவியுள்ளது. இங்கிருந்துதான் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஏஜென்சியின் சேமிப்புக் கலன்களுக்கு எல்லாத் தகவல்களும் அனுப்பப் படுகின்றன; சேமிக்கப்படுகின்றன.

அப்படி என்றால்யார்எதிரியோ அவன்மீது மட்டும்தானே இந்தக் கண்காணிப்புகள் நடத்தப்பட வேண்டும், எதற்காக ஒவ்வொரு அமெரிக்கர்மீதும் இந்தக் கண்காணிப்புகள் நீட்டிக்கப்படுகின்றன என்பதுதான் ஸ்நோடெனின் அடிப்படை கேள்வி. இதனை அவர் தனது நாட்டு மக்களின் உரிமைப் பிரச்சினையாக அணுகுவது எத்தனை சரியோ, அதே பாணியில் உலகம் முழுவதிலும் உள்ள வெவ்வேறு நாட்டுப் பிரஜைகளும் தங்களின் மீதான இந்த உளவை எதிர்த்து தங்களின் சுதந்திரத்தின் மீது காய்ச்சி ஊற்றப்படும் தாராக இதைப் பார்க்கும் அவசியம் இருக்கிறது. இந்த உளவு என்பது ஐ.நா. வரையறுக்கும் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் செயலன்றி வேறென்ன?

ஸ்நோடன் தனது பேட்டியில் இவ்வாறாகக் கூறுகிறார் "இப்படி ஒரு பணியில் இருக்கும் போது உங்களுக்கு ஏராளமான தகவல்களுடன் தொடர்பு ஏற்படுத்துகிறது. அந்தத் தகவல்கள் உலகில் வாழும் மொத்த மக்களின் வாழ்வுடன், அந்தரங்கங்களுடன், அரசியல் சார்புடன் தொடர்புடையது." ஸ்டேநாடனின் இந்த வரிகளைக் கேட்கும் போது அதில் ஒரு மனசாட்சியின் குரல் மேலோங்கியிருப்பதை உணரமுடிகிறது. இதற்காகவே இவருக்கு நோபல் பரிசு வழங்கப் பட வேண்டும். இவரது அம்பலங்கள் சாதாரண மானவையல்ல, மாறாக உலக மக்களின்மீது ஏகாதிபத்தியம் தொடுத்து வரும் ரகசிய போரைப் பற்றிய விபரங்கள்.

மேலும் அந்தப் பேட்டியில், "நீங்கள் அரசின் பணியாளனாக, மக்களுக்கு எதிரான வேலை செய்ய நியமிக்கப்படுகிறீர்கள். மனச்சாட்சியுள்ள ஒருவராக நீங்கள் அந்த வேலையைத் தொடர்ந்து செய்ய இயலாது" என்கிறார்.

நம் ஊரிலோ அரசுப் பதவிகளில் சொகுசாக வாழ்ந்து விட்டு, ஓய்வு பெற்று, சில மாதங்களில் தங்களின் ஓய்வூதியம் தொடர்பான கோப்புகள் கையெழுத்தாகி விட்ட தா என்பதை உறுதி செய்து விட்டு, அதன் பின் ஒரு மாதம் காத்திருந்து வங்கிக் கணக்கில் முதல் ஓய்வூதியத்தொகை வந்து வழுக்கி விழுந்ததா என்பதை உறுதி செய்த பிறகு தங்களின் வாய்சவடாலைத் தொடங்கி நம் கண் முன்னே துரிதவேக அரசியல்வாதிகளாக, மக்கள் நண்பர்களாக உருமாறிவலம்வருபவர்கள்தான் ஸ்நோடெனின்பேட்டியை வாசிக்கும் போது கண்முன்னே வந்து நிற்கிறார்கள்.

ஹாங்காங்கில் இருந்து மாஸ்கோ சென்ற ஸ்நோடென், அமெரிக்காவின்இரகசியங்களை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் ரஸ்யாவில் தற்காலிகப் புகலிடம் வழங்கப்பட்டுள்ளார். மாஸ்கோவிலிருந்து கொண்டு 21 நாடுகளின் தூதரகங்களில் ஸ்நோடனின் அடைக்கலம் கோரும் மனுவை அனுப்பியிருந்தார். ஈக்வடார் உள்ளிட்ட 8 நாடுகள் இந்த மனு தங்கள் நாட்டில் இருக்கும் பட்சத்தில் தான் ஏற்க இயலும் என்று அறிவித்தன. மனுவை பிரித்துக்கூட பார்க்காத நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ரஸ்யாவும், சீனாவும் நிழல் கூத்துக்கள் நிகழ்த்துகின்றன. வெனிசுலா மற்றும் ஒருசில நாடுகள் மாத்திரமே சம்மதம் தெரிவித்துள்ளன. உலகின் மனசாட்சியாக விளங்குபவர்களைக் காக்கும் தைரியம் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குத்தான் உள்ளது என்பது மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(இக்கட்டுரை முத்துக்கிருஸ்னன் அவர்கள் எழுதிய எல்லைகளுக்கு அப்பால் - எட்வர்ட் ஸ்நோடென் என்ற பத்தியை மையக்கொண்டு, பதிவேற்றப்பட்டுள்ளது)

**நம் ஊரிலோ அரசுப் பதவிகளில் சொகுசாக வாழ்ந்து விட்டு, ஓய்வு பெற்று, சில மாதங்களில் தங்களின் ஓய்வூதியம் தொடர்பான கோப்புகள் கையெழுத்தாகி விட்டதா என்பதை உறுதி செய்து விட்டு, அதன் பின் ஒரு மாதம் காத்திருந்து வங்கிக் கணக்கில் முதல் ஓய்வூதியத்தொகை வந்து வழுக்கி விழுந்ததா என்பதை உறுதி செய்த பிறகு தங்களின் வாய்சவடாலைத் தொடங்கி நம் கண் முன்னே துரிதவேக அரசியல்வாதிகளாக, மக்கள் நண்பர்களாக உருமாறி வலம் வருபவர்கள்தான் ஸ்நோடெனின் பேட்டியை வாசிக்கும் போது கண்முன்னே வந்து நிற்கிறார்கள்.**

சட்டம் தொடர்பான ஆலோசனைகள் கேள்வி பதிலாக இடம்பெறவுள்ளதால் அவைபற்றிய விபரங்களையும் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அறிவியல்சார் வினாக்களை அறிவு பூர்வமாக தெரிந்துகொள்ள உங்கள் கேள்விகளை எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

ரத்தத்தைக் கண்டுகனநாளாய்ப் போச்சு எண்ட ஆசையை பச்சைச் சீருடையள் வெலிவேரியாவிலை தீர்த்திருக்கினம். சர்வாதிகாரத்தின் வடிவம் தன் சொந்த மக்கள் மீதே பாயும் எண்டதையும், வன்னியிலை என்ன நடந்திருக்கும் எண்டதையும்சிங்களச்சகோதரங்கள் அங்கை பார்த்திட்டுதுகள். நொந்துபோய்இருக்கிற அதுகளுக்கு ஆறுதலாய்நாலுவார்த்தை பேசி நாங்களும் மனிசர் எண்டதையும், எங்களுக்கும் இனவாதம் கடந்த மனிதாபிமானம் இருக்கெண்டதையும் காட்டவேணும். வெலிவேரியாவைப் பற்றிக்கதைக்கிறவை ஏன் முள்ளிவாய்க்காலைப்பற்றிக் கதைக்கயில்லை? எண்டு இந்த நேரத்திலை பேய்க்கதை கதைக்கிற பைத்தியக்காரத்தனம் அந்தச்சனத்தின்ரை வேதனையை அதிகப்படுத்தும்.

முழு உலகமும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும், பத்திரிகையாளரும், சாதரண சனமும் இதுக்கு எதிரா குரல் குடுக்கேக்கை, எங்கடை அரசியல்தலைமையள் அதிகம் சத்தம் போடயில்லை. ஜனாதிபதித் தேர்தலிலை பொன்சேகாவை ஆதரிக்கிறம் எண்டும், ஐக்கிய தேசியக்கட்சியின்ரை உத்தேச அரசியல் யாப்பு சுப்பரோ சுப்பர் எண்டும் ஆரும் கேளாத நேரங்களிலை ஆ... எண்டு அகலமாய் வாய் திறந்தால் அரசாங்கத்துக்கு கிளுகிளுப்பாய் இருக்கும் எண்டு விளங்கிற அவையின்ரை ராசதந்திரத்துக்கு நவிப்பிள்ளை வாறநேரத்திலை வாய்திறந்தால் அரசாங்கத்துக்கு கிறுகிறுப்பாய் இருக்கும் எண்டும் விளங்கியிருக்கும் போலை.

அரசியல்வாதிகளை விடுங்கோ. யாழ்ப்பாணம் பெரிய பள்ளிக்கூடத்திலை இருக்கிற அரசகுமாரன் மாதிரியான விரிச்சுரைக்கிற ஜனநாயகப்போராளிகள், எதிர்காலப்புத்தி ஜீவிகளாகப்போகிற பொடியள் எண்டாலும் எங்கை மனிசனுக்குத் துன்பம் நடந்தாலும் குரல்குடுக்கிற, அனுதாபப்படுகிற பழக்கத்தைப்பழக வேணும் பாருங்கோ. எதிர்காலத்திலை எண்டாலும் சிங்களச்சகோதரங்கள் எங்களை மனிசராய் மதிச்சு எங்களுக்காகவும் கதைப்பினம்.

ஒரு இடத்திலை நில்லாமல் அங்கிடு தத்தித்தனமாய் அங்கையும் இஞ்சையுமாய் ஓடித்திரிஞ்ச கனபேர் மாகாண சபை வேட்பாளர் தெரிவு தந்த அதிர்ச்சியிலை இருந்து இன்னும் முழுமையாய் விடுபடயில்லையாம். இரண்டு பக்கத்திலையும் இப்பிடி முழுசாய் விறைப்பெடுபடாத ஆக்கள் இப்பதான் மெல்லத்தேறிவருகினமாம்.

முந்தி ஊடகத்துக்குப் பேசினவரை இருபதோடை இருபத்தி ஒண்டாய் கூப்பிட்டு பலாலியிலை ஃபசன்புறுட் ஜூசும், வரணியிலை வத்தகைப்பழ ஜூசும் குடுத்ததைக் கேள்விப்பட்ட எங்கடை ஊடகங்கள் தாரதம்மியம் விளங்காமல் வாத்தியார்தான் முதன்மை வேட்பாளர் எண்டு புரளியைக் கிளப்பிவிட, கடைசியிலை ரீவியிலும் இல்லாமல், வேட்பாளர் பட்டியலிலும் இல்லாமல் சுயேட்சையாய் நிக்கிற நோக்கமில்லையெண்டு நோகாமல் ஒதுங்கினவரல்லோ. அவர் ஒதுக்கப்பட்டதுக்கு தியேட்டரிலை இருந்து கோயில் வீதிக்கு ஓடினதும் ஒருகாரணம் எண்டு சொல்லுகினம். அப்பிடி ஓடினவையிலை வடமராட்சி பெரிய வாத்தியார், சின்னமீன் பிடிக்கிற சங்கத்தலைவர் எண்டு கனபேர் ஏமாந்தவையாம்.

மற்றப் பக்கத்திலை இளைய தளபதியெண்டு தரிசனங்காட்டின பெரிய பள்ளிக்கூடத்துப் பொடியனும் வீட்டை முழுசாய் நம்பாமல், நங்கூரத்திலையும் ஒருகால் வச்சிருந்தவர் எண்டு கதை உலாவுது. அதைவிட முள்கம்பிக்குள்ளாலை ரயில் என்னண்டு போகுமெண்டு பெரிய இடத்திலையே நொடி கேட்டவருக்கும் ஓடாமல்

## சுவாமி



## வம்பானந்தா

**புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து**
**பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து... -கமல்ஹாசன்**

ஒரு இடமாய் நிண்டும் பட்டியலிலை ஒரு இடங்குடுக்காமல் கைவிட்டிட்டினமாம். எல்லாரும் இலட்சியம் பேசிறதும் சனத்துக்குப் படங்காட்டிறதும் கதிரைச்சவாரிவிடத்தான் பாருங்கோ.

இப்ப கொஞ்சநாளாய் இரண்டு மணிக்குப்பிறகு வயது போனவை, வயிறு பெருத்தவையைத் தவிர உசாரான ஒருத்தரையும் யாழ்ப்பாணத்திலை இருக்கிற பிரதேச செயலகங்களிலை காண முடியுதில்லையாம். சில இடங்களிலை பத்து மணிக்கே காணாமல் போயிடுகினமாம். யாழ்ப்பாணப்பெரிய கந்தோரிலையும் நிலைமை கிட்டத்தட்ட இப்பிடித்தான் எண்டு கதைக்கினம். எல்லாரும் இந்தமுறை பெரிய அதிகாரியின்ரை கோப்பையைத் தாங்கள்தான் வாங்கவேணும் எண்டு கங்கணம் கட்டிநிக்கினமாம். வேலை செய்யயில்லை எண்டு ஒருநாள்கூட பேசியறியாத அதிகாரியள் விளையாடப் போகயில்லை எண்டதுக்காக தும்புபறக்க பேசுகினமாம்.

நல்லா விளையாடுங்கோ, கோப்பை வாங்குங்கோ சந்தோசம். ஆனால் அடுத்தவேளை கஞ்சிக்கு கையேந்தி வாற சனத்தின்ரை வாழ்க்கையோடை விளையாடாமல், அதுகளுக்கு ஆற்றவேண்டிய சேவையோடை விளையாடாமல் விளையாடுங்கோ.

தீக்குளிப்பு எண்ட சொல்லைக்கேட்டால் போனமாதம் வரைக்கும் முத்துக்குமாரும் செங்கொடியும்தான் ஞாபகம் வந்தவை. இப்ப எனக்கு அதிலை ஆள்மாறாட்டமாய் போச்சுது. கலாச்சாரத்தை கட்டிக்காக்கிறன் எண்டு விடுதியளுக்குள்ளை பாஞ்சு கிட்டத்தட்ட எங்கடை “தல” மாதிரிப்படங்காட்டின பொடியன் கடைசியாய் “அண்ணனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தாதுவிடின் நான் தீக்குளிக்கவும் தயங்கமாட்டேன்” எண்டு இவர் விட்ட தீக்குளிப்பு அறிக்கை நிண்டவெள்ளத்தையும்வந்த வெள்ளம் கொண்டுபோன மாதிரி ஆக்கிப்போட்டுதாம்.

அறிக்கையே விடாமல் ஆவரங்காலிலை ஒருபிள்ளை அஜித் படத்தைக் கைவிடமாட்டன் எண்டு சொல்லி தீக்குளிச்சிருக்குது. செத்த பிள்ளைக்கு அனுதாபப்பட வேணும்தான். பாவம்ஏதோ அவசரப்புத்தியிலை அந்தப்பிள்ளை அப்பிடிச் செய்துபோட்டுது. ஆனாலும் அந்தப்பிள்ளை இலட்சியவாதி பாருங்கோ. நான் ஒருத்தரோடையும் ஒப்பிட்டுக்கதைக்கயில்லை. நீங்கள் ஆரையும்பற்றி யோசிச்சால் நான் அதுக்குப் பொறுப்பில்லை.

“தலைவா” பார்க்க வந்து யாழ்ப்பாணத் தெருவிலை இந்தியச் செத்த வீடுகளிலை ஆடுகிற றேஞ்சுக்கு ஆடினதுகளையும், அஜித் படத்தை அண்ணன் தொட்டதுக்கு தீக்குளிச்ச பொடிச்சியையும், அண்ணனைக்கதிரைச்சவாரிக்கு விடாட்டில் தீக்குளிப்பன் எண்ட கலாசாரக்காவலனையும் பாக்கேக்கை இதுகளுக்காக தன்னை எரிச்ச “முத்துக்குமாரை” நினைக்க பாவமாக்கிடக்குது.

ஒருத்தரையும் குறை சொல்லுறது என்ரை நோக்கமில்லைப் பாருங்கோ. முகம் நோக்கிச் சிரிப்பது நட்பல்ல, குறைநீக்க உரைப்பதே நட்பு எண்டு நினைச்சு எழுதிறன். நீங்கள் எனக்கேதும் எழுதிறதெண்டால் vampanantha@gmail.com க்கு எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

# என் இதயத்தில் வாழும் ஏ.ஜே.

**- நவாலியூர் நடேசன்**



“ஏ.ஜே” - இந்த இரண்டு எழுத்துக்களுக்கும் எந்தப் பட்டங்களுக்கும் இல்லாத உன்னதமானதோர் தனி மதிப்பு எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வறிவாளர்கள், கலைஞர்கள் எல்லோரது மத்தியிலும் என்றுமே நயந்து போற்றப்பட்டு வந்தது.

அவ்வெழுத்துக்கள் குறிக்கும் நூலறிபுலவர், விமர்சக அறிஞர், பெருங்கலைஞர், பெருந்தகையாளர் ஏ.ஜே. கனகரத்னா பட்டங்களிலும் பாராட்டுக்களிலும் அக்கறையில்லா இயல்புள்ளவர் அவைகளில் ஒட்டாமல், நூல்களை ஆழ்ந்து படிப்பதிலும் படித்துச் சுவைப்பவைகளை மற்றவர்களும் சுவைத்து அனுபவிக்கும் வண்ணம் எழுதுவதிலும் கலைந்துரையாடுவதிலும் இன்பங்காண்பவர்

இவை அனைத்திற்கும் மேலாக அவர் மனித நேயம் மிக்க இளகிய இனிய இதயம் உள்ளவர். ஆனால் சிறுமை கண்டால் முகமன் பார்க்கமாட்டார். நேரேயே வெளிப்படையாகச் சொல்லிவிடுவார். பொங்கி எழுவார். அவரது வார்த்தைகள் குரிய வாள்வீச்சாக அவ்வேளைகளில் மின்னும்.

தூய பிரமச்சாரியாக வாழ்ந்த அந்த அபூர்வ மனிதரின் வாழ்வின் தடமும், இலக்கியப் பணியும் பாடப்படாத காவியம் போல மறைபுலத்திலே உள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையில் 1966 ஆம் ஆண்டு தொடக்கம் பத்து வருடங்களுக்கு மேலாக நான் அவரின் பக்கத்தில் இருந்து கூட்டுறவு, ஐக்கியதீபம் பத்திரிகைகளில் பணியாற்றிய காலங்களில் அவர் என் இதயத்தில் அமர்ந்து கொண்டார். அவர் அனுபவம் வாய்ந்த சிறந்த பத்திரிகையாளர். டெயிலி நியூஸ், சற்றடேறிவியூ, திசை முதலிய பத்திரிகைகளில் பணியாற்றியிருக்கிறார்.

அவரிடமிருந்து அரிய விடயங்களை என் இதயம் உள்வாங்கியிருக்கிறது. அவரால் நான் பெற்ற நன்மைகள் பல. அவரோ என்னைத் தனது வலக்கை என்று பலருக்கும் அறிமுகம் செய்திருக்கிறார்; எழுதியுமிருக்கிறார்.

அவர் Cooperator ஆங்கிலப் பத்திரிகையில் பத்திராதிபச் செயலாளராகக் கடமையாற்றினார். அப்பத்திரிகைக்கு ஒரு பத்திராதிபக் குழு இருந்தது. முன்னாள் பேராசிரியர் கு. நேசையா அவர்கள் அதன் தலைவர். அப்பத்திரிகையின் தமிழ்ப்பகுதிக்கு நான் பொறுப்பாக இருந்தேன். ஏ.ஜே. கட்டுரைகளையும், செய்திகளையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எனக்கு உதவுவார்.

அவரின் ஆழ்ந்த அறிவுக்கும், திறமைக்கும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக அல்லது ஒரு துறையின் தலைவராக இருந்திருக்கவேண்டியவர்.

அவரின் ஆற்றல், விசுவாசமான உழைப்பு, இனிய பண்பு நலன்கள் யாவும் அனைவரையும் ஈர்த்தன. எல்லோரும் அன்புடன் அவரைக் கனெக்ஸ் என்றே அழைத்தனர்.

ஏ.ஜே. ஒரு பணியைச் செய்யத் தொடங்கினால் உணவு, உடல் வருத்தம் எதையுமே பொருட்படுத்தாது தன்னை அதற்கு அர்ப்பணித்து உனர்வுடன் செயற்படுவார். தான் செய்யும் பணி செம்மையுற வேண்டும் என்பது அச்செம்மலின் உயிர் மூச்சான கலையுள்ளப் பண்பு தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கும் அழகாக மொழி பெயர்ப்பார். ஈழத்து எழுத்தாளர்களின் தமிழ்ச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய செழுமையை ஊட்டியவர். அதனால் பிறமொழியாளர்கள் தமிழ்ச் சிறுகதை உலகை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இவரால் ஏற்பட்டது.

எனவே அவரின் வண்ணமான அப்பணி தொடர வேண்டும் என்று திரு.பத்மநாப ஐயரும் வேறு நண்பர்களும் வெளிநாட்டிலிருந்து அவரைத் தூண்டிக் கொண்டிருந்தார்கள். அந்நிலையில் “காலம்” சஞ்சிகை பத்மநாப ஐயரின் முயற்சியால் 2002ஆம் ஆண்டு ஜூன் மாத இதழை ஏ.ஜேயின் சிறப்பிதழாக வெளியிட்டது.

எஸ்.பொன்னுத்துரை ஏ.ஜேயின் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் அடங்கிய ப. மத்து என்ற நூலை இரண்டாம் பதிப்பாக இந்தியாவில் வெளியிட்டார் அத்துடன் ஏ.ஜேயின் “செங்காவலர்” நூலையும் வெளியிட்டார்.

அக்காலத்தில் அவரைச் சிறிது சிறிதாக நோய்கள் பிடிக்கத் தொடங்கி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தாலும் அவர் தனது பணியில் சோர்வடையவில்லை.

கிருஷ்ணகுமாரதும் அவரது துணைவியாரதும் அன்புக்கவணிப்பில் இருந்த ஏ.ஜேக்கு நோய் கூடியதால் அவர் கொழும்பிற்குத் தனது சகோதரன் வீட்டிற்குச் சென்று விட்டார்.

எத்தனை நெருக்கடிகளிலும் யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்ல மனமில்லாத மண்பற்றுடனும், நண்பர்களின் பற்றுடனும் வாழ்ந்த அவர், யாழ்மண்ணின் இயற்கைக் காட்சிகளையும், யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பாரம்பரிய பாணங்களையும், உணவு வகைகளையும், கிராமியக் கலைகளையும் மிகவும் ரசிப்பார்.

மறக்க முடியாத இனிய அற்புத மனிதர்! அவர் என் இதயத்தில் வாழ்கிறார்!

# 'யாழ் விருது' - 2013



யாழ்.மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழு வழங்கும் 'யாழ் விருது' இவ்வருடம் வண.கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்பட்டது. கடந்த 21ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வின்போது இவ்விருது வழங்கல் வைபவமும் இடம்பெற்றது.

கலாநிதி நீ. மரியசேவியர் 1965ஆம் ஆண்டு உரும்பிராயில் 9 பேருடன்திருமறைக்கலாமன்றத்தைத்தாபித்து இன்று அதனைப் பெருவிருட்சமாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். தமிழரின் தத்துவம் சைவசித்தாந்தமே எனக் குரல் கொடுப்பவர் சைவசித்தாந்தத்தில் ஆழ்ந்த அறிவுள்ளவர். இந்துக்களைக் காட்டிலும் இந்து சமயத்தை முழுமையாக அறிந்த மதம் கடந்த ஞானி. காலத்தைக் கலையாக்க வல்லவர். பல சவால்களுக்கு முகங்கொடுத்து கிறிஸ்தவச்சூழலில் பரதக் கலையைச் செல்வாக்குப் பெறச்செய்த பெருமைக்குரியவர். மதம், மொழி கடந்த நிலையில் கலைப்பாலம் அமைத்து கலைகளின் ஊடே பெரும் நிறைவைப்பெற்று மகிழும் கலைத் தூதராக உள்ளமை குறிப்பிடத்தக்கது

# காடுகளின் தேசம்

கிளிநொச்சியும் முல்லைத்தீவும் வறண்டு போய் காய்ந்து கருகி இருக்கும் நகரங்கள் என்று நீங்கள் இதுவரை நினைத்திருந்தால் ஏமாந்து போவீர்கள். நீங்கள் ஏற்கனவே அதாவது யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிக்கு முதல் அங்கு சென்றவராக இருந்தால் வித்தியாசத்தை உணர முடியும். அல்லது பக்கத்தில் அவ்வாறு போய் வந்தவரை வைத்திருக்க வேண்டும்.

முல்லைத்தீவில் வீதிக்கு இரண்டு பக்கமும் பெரிய காடுகள். மணலாறுக் காட்டின் தொடர்ச்சி இந்தக் காடுகள். இங்கே தான் இந்திய அமைதிப்படையின் கடைசிச் சண்டைகள் இடம்பெற்றதாகக் கூறுகிறார்கள். அடர்ந்த, உயர்ந்த இந்த மரங்கள் தான் அந்த நேரங்களில் கெரில்லாப் போர் முறையின் முக்கிய காரணியாக இருந்திருக்கக் கூடும். மரங்களுக்குக் குறுக்கே வயர்களைக் கட்டி அதில் கண்ணிகளை வைத்திருந்தது வழி பெரிதும் பரிச்சயமில்லாத போர் வீரர்களுக்கு சவாலாக இருந்திருக்கலாம். சில இடங்களில் வீதியின் அருகாமையில்



ஒட்டுசுட்டான் வயல்



முல்லைத்தீவு தண்ணீரூற்று

-அம்பிகா

மட்டும் தேக்கு மரக் காடுகள். சரியான இடைவெளிகளில் நடப்பட்டு, முறையாக பராமரித்ததில் நீண்டு வளர்ந்து நெடிதுயர்ந்து (எவ்வளவு கடினமான தமிழ் வார்த்தை!) நிற்கும் தேக்கு மரங்கள். இடையிடையில் எங்கிருந்தோ ஓடி வரும் நீரோடைகள். பாலத்துக்குக் கீழே பாறைகளை வழுக்கல் பாறைகளாக்கி, மணலை குவித்து, அதன் மேலாக ஓடிச் செல்லும் மண்ணிற நீர்.

சில இடங்களுக்குப்போக இப்போது அனுமதி கிடைப்பதில்லை. தூரத்தில் நந்திக் கடல் தெரிகிறது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்குப் போக முடியும். (தண்ணீரில் விளக்கெரிப்பதாக கூறக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அந்தக் கோயில் தான்! ) சில இடங்களில் வீதியின் இரு பக்கமும் களப்பு நீர் ஓடி தேங்கிப் போய் நிற்பதனால் அதில் குப்பையாக தாமரைப் பூக்கள்... வெள்ளை, சிவப்பு நிறத்தில் பச்சை இலைகளோடு ஒரு போர்வை போர்த்தியது போல் பூத்துக் கிடக்கின்றன. ஊதா நிறத்தில் அல்லிகள் வேறு.

ஊர் தான் அழகே தவிர மக்களின் வாழ்க்கை சிறிய வீடுகளுக்குள் முடங்கிப் போய் இருக்கிறது. நாலு தடி நட்டுக் கிடுகு வேய்வதை வீடு என்று நீங்கள் ஒத்துக் கொண்டால் அது வீடு. அரசாங்க வீட்டுத்திட்ட வேலைகளும் நடக்கிறது. நீங்கள் முல்லைத்தீவு வீதியில் பயணித்தவராக இருந்தால் மீண்டும் அடுத்த ஜென்மத்தில் தான் அங்கே செல்ல விரும்புவீர்கள். வீதி அமைப்பதற்காக ஜாக்கி சானின் சொந்தக் காரர்கள் (அது தான் சீனாவைச் சேர்ந்தவர்கள்) வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடிசைகளுக்குப் பின்னும் கொஞ்ச கொஞ்ச இடங்களில் மக்கள் நட்டிருக்கும் வெண்டி, பயறு, கத்தரிச் செடிகள் பூத்திருக்கின்றன. அங்கே பூத்திருப்பது செடிகள் மட்டும் அல்ல, அவர்களின் நம்பிக்கையும் தான்.

முல்லைத்தீவைப் போலவே கிளிநொச்சியும் செழிப்பான மற்றுமொரு நகரம். நிறையக் குளங்கள். பெயர் தெரிந்த பெரிய குளங்களில் இருந்து பெயர் தெரியாத, அங்கங்கே தேங்கி நிற்கும் குட்டைகள் வரை தண்ணீர் தண்ணீர். (பாலு மகேந்திரா படத்துக்கு நேர்எதிராக). இரணைமடுக்குளத்து நீர் (இராணுவம் முன்னேறிய போது புலிகள் அணைக்கட்டைத் திறந்து விட்டதாகக் கூறக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்தக் குளம் தான்!) வீதியின் ஒரு பக்கத்தில் அகலமான ஒரு வாய்க்காலாக ஓடி வருகிறது. பிரதான வீதியில் இருந்து சிறு வீதி பிரியும் போது அந்தச் சிறிய வீதியின் இரு பக்கங்களிலும் மஞ்சள் நதி போல ஓடி வருகிறது. அடர்ந்த காட்டு மரங்கள், நீர்த் தாவரங்கள், என எல்லாவற்றையும் தாண்டி பச்சை வெளியாக இருக்கும் வயல்களில் போய் நெல்லின் காலை நனைக்கிறது. ஒரு பழைய படத்தில் பிரஷாந்த், சைக்கில் ஒன்றை உருட்டிய படி 'அட இங்கே பார் தென்றல் தேரினில் எங்கும் போய் வரலாம்...' என்று பாடியபடி வருவார் ஞாபகம் இருக்கிறதா? அந்த பாடல் காட்சியில் வரும் இடம் போலவே அத்தனை பசுமையும் நீரோடைகளும்.

பிரதான வீதியில் இருந்து பிரியும் அந்த சிறு வீதியில் இருக்கும் ஒரு ஒழுங்கையில் ஒரு இல்லம். அதை நடத்தி வரும் கன்னியாஸ்திரி ஒரு சிறிய உருவம். சின்ன மோட்டார் சைக்கிள் ஓடுகிறார். வயதானவர். யுத்தக் காலத்தில் கடைசி நேரம் வரையும் இருந்து பிறகு இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளுடன் இடம் பெயர்ந்து புனர்வாழ்வு முகாமில் இருந்து இப்போது மீண்டும் அதே பழைய இடத்தில் அதே இல்லத்தில் இன்னும் அதிக பிள்ளைகளுடன் இருக்கிறார். கிணற்றில் இருந்து வாளியில் தண்ணீர் எடுத்து குளியலறைக்கு சுமந்து செல்லும் பிள்ளைகள். ( குழாய் மற்றும் மோட்டார் வசதி இல்லாததால்) அவர்களுடைய பொது மண்டபத்தில் அத்தனை அமைதி. அப்படி ஒரு சுத்தம். உயரத்தில் ஒரு மேடையில் மேரி குழந்தை இயேசுவின் கையை பிடித்தபடி நிற்கிறார். பணப் பற்றாக் குறை இருந்தாலும் உரிய நேரத்தில் அந்த பணத்தை இறைவன் அனுப்பி வைப்பான் என்று அந்த கன்னியாஸ்திரி அம்மையார் அமைதியாக புன்னகைக்கிறார். சிறு பிள்ளை போல் ஓடியாடி வேலை பார்க்கும் இன்னொரு கன்னியாஸ்திரி, கண்ணாடி அணிந்த தலைமை கன்னியாஸ்திரி என்று அந்த இடம் ஒரு விதமான பரிசுத்தமான இடமாக இருக்கிறது. காற்றில் ஒரு மெல்லிய சோகம் பரவினது போன்ற அமைதி அந்த இடத்தில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.

இந்தக் கன்னியாஸ்திரி முன்பு இல்லத்துப் பிள்ளைகளுடன் புனர்வாழ்வு முகாமில் இருந்த போது இவருக்கு கன்னியாஸ்திரி என்ற சலுகையில் கொஞ்சம் கூடுதல் உணவு கிடைக்குமாம். அந்த நேரம் அங்கே கடும் உணவுப் பஞ்சம் இருந்தது. இவர் தனக்குக் கிடைக்கும் உணவை , உணவுக்காக அழும் மிகவும் வயது குறைந்த பிள்ளைகளுக்கு கொடுத்து விடுவாராம் என்று கூறினார்கள். கேட்கும் போது இவ்வளவு பசுமையும் தண்ணீரும் செழிப்பும் இந்த மாதிரி உள்ளங்களுக்காகத் தான் இருக்கிறதோ என்று தோன்றுகிறது.

எவ்வளவு அழகான செழிப்பான இடம் என்று கூறும் போது அதற்காகத் தானே இத்தனை சண்டையும் என்று திருப்பிக் கேட்கிறார்கள். உண்மை தானோ?

# நவநீதம்பிள்ளையின் பொறுப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் பலவித எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவரது வருகை பற்றிய தகவல்கள் பல மாதங்களிற்கு முன்பிருந்தே எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றது. வடக்குக்கிழக்குப் பிரதேசங்களிற்கு செல்லவுள்ள நவநீதம் பிள்ளையின் நிகழ்ச்சி நிரல் எவ்வாறு அமையும் என்ற கேள்விக்கான பதில் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்படுகின்றது.

கற்றுத்தந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரகாரம் மனித உரிமைகள் விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்துவார்கள் எனத் தெரிய வருகின்றது. வன்னியில் இறுதிப் போரில் பாதித்துள்ள பிரதேசங்களை நேரடியாகப் பார்வையிடவுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் என அறிய முடிகின்றது

சுமார் 50 வரையான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அரசியற்கட்சிப் பிரமுகர்களையும் மதத் தலைவர்களையும் சந்தித்து மனித உரிமை விடயங்கள் மற்றும் மத சுதந்திரம் இன நல்லிணக்கம், இராணுவத் தலையீடுகள் மக்களின் இயல்புவாழ்வு பற்றி கலந்துரையாடல்களை நவநீதம்பிள்ளை மேற் கொள்வார் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெரும் எதிர்ப்புக்கள் எதிர்ப்பார்ப்புக்கள் மத்தியில் இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் விஜயத்தை நிறைவு செய்து மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை என்ன என்ற கேள்வியே தமிழ் மக்களிடமுள்ளது. தாம் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், கௌரவமாகவும் வாழவும், தலையீடுகள், அத்துமீறல்கள் அற்ற இயல்பான சூழலை ஏற்படுத்துதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணையின் அவசியத்தை நேரடியாக பார்த்தும் கேட்டும் விளங்கிக்கொண்டு நடவடிக்கை எடுப்பார் என்பதே தமிழ் மக்களின் விருப்பமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பொறுப்புமாகும்.

முதலாம் குறுக்குவீதி, மணிப்புரி யாழ்ப்பாணத்திலுள்ள யூட்பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 23.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது